

WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

AKARAM

# அகரம்

14.05.2016 - 13.06.2016

சுவடி: 5.01 திருவள்ளுவர் ஆண்டு 2047 ISSN 2195-6480



## இதை விடப் பச்சையாய் இலங்கையில் தமிழனுக்கு இடம் இல்லை என எப்படிச் சொல்ல முடியும்?



வாசகர்களுக்கு நன்றி

6வது ஆண்டில் அகரம்

வடக்கு கிழக்கு மக்களின் தலைகளில் 130,000,000,000 ரூபா கடன் சுமையா?

FREE CIRCULATION:

GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TKS BEST FOODS

DORTMUND மாநகரில்

**Asiatische - Afrikanische & Europäsche Lebensmittel Einzelhandel**

öffnungszeiten:
Mo.-Sa.: 09:00Uhr - 20:00Uhr
So. & Feiertage geschlossen

Tel.: 0231 95 04 68 81
Fax.: 0231 95 04 68 82
www.tks-bestfoods.de
info@tks-bestfoods.de

Rheinische Str. 79
44137 Dortmund
Germany





மக்களின் தேவைக்கும்,
வேண்டுகோளிற்குமிணங்க தரம்
என்பதை **தாரகமந்திரமாய்...**
நியாயமான விலைகளுடன்...

## TKS BEST FOODS

பலசரக்கு பொருட்கள்,
மரக்கறிவகைள், மீன்வகைகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Ria
Worldwide Money Transfer

அனைத்து
நாடுகளுக்குமான
துரித பணமாற்று சேவை



Tilda · TRS · VAANI Foods · Rabeena · TKS · Cock Brand · Maliban · LEELA · AROY-D · PATAK'S · Nestlé · KTC · Niru

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய வரவு** | ஐரோப்பாவிற்க்கான **புதிய சேவை**

# ortel MOBILE

# CROSS

750 MB SURFEN & 300 MIN. TELEFONIE

**= 20,00€[16] /30 Tage**

## ஒரே SIMல் இருந்து
## 300 நிமிடங்கள் ஒரு மாதத்திற்கு பேசலாம்.
## 750 MB இன்ரர்நெற்றும் பாவிக்கலாம்.

**ஒரு மாதம் முடிவதற்குள்ளேயே 300 நிமிடங்கள் முடிந்தாலும், அதன் பிறகு 9 சென்ற் நிமிடத்திற்கு கணக்கிடப்படும்.**

**750 MB முடிந்தால், மீண்டும் 9 யூரோவிற்கு 500 MB பெறலாம்.**

**20 யூரோவுக்கு ஐரோப்பாவின் எந்த நாட்டிலும் இருந்தபடி ஐரோப்பா முழுவதும்**



CROSS

750 MB SURFEN & 300 MIN.

Danach 0,25€/MB

Danach 9 Cent/Min.

- + IN DEUTSCHLAND
- + NACH EUROPA
- + IN EUROPA
- + EINGEHENDE ANRUFE KOSTENLOS

**20,00€[16] /30 Tage**



www.ortelmobile.de

Ortel. In über 220 Länder sprechen. Powered by e·plus+

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

**14. வைகாசி - 13. ஆனி 2016**
**சுவடி / Issue: 5.01**

தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)



தொடர்புகளுக்கு:
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: ***editor@akaram.eu***



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பரதார வள்ளல்களுக்கும் வணக்கம்.

ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்து ஆறாவது ஆண்டில் தடம் பதிக்கின்றது இந்த இதழ் ஐந்து ஆண்டு என்பது மிக சொற்பகாலம் தான் ஆனால் அகரம் சந்தித்தது மிக அதிகம் அவற்றை எல்லாம் தாண்டி மிக சொற்ப விளம்பர அனுச ரணையாளர்களாலும் வாசகர்களின் எதிர்பார்ப்புக்களாலும் தொடர்கின்றது பயணம் தொடரும் பயணம்.

நாம் சந்தித்த இடர்களை அனைவருடனும் மனதிறந்து சொல்லுகின்றோம். ஒரு இலவச பதிப்பு தானே என்று நீங்கள் கையில் எடுக்கும் போது அது எத்தனை சுமைகளை கடந்து வருகின்றது என்று சிந்திப்பவர்கள் மிக மிகச்சிலரே. சில விடயங்களை அடிக்கோடிட்டு கூறலாம். மேலே கூறியது போல மிக சொற்ப விளம்பரங்கள் தான் வருகின்ற போது கூட விளம்பரதாரர்களை அணுகி தடுக் கின்ற செயற்பாடுகளின் காரணத்தால் பல விளம்பரங்களை இழந்து கொண்டிருக்கின்றோம்.

அடுத்து விநியோகத்தை தடுப்பது; பொது இடங்களில் விநியோகத்தை முடக்குவதில் வரும் சிரமம். இவையெல்லாம் பொருளாதாரத்தில் வந்துகொண்டிருக்கும் சிரமம். இதுமட்டுமல்லாமல் எந்த பின்புலமும் இல்லாமல் இருக்கும் எமக்கு பல பின்புலம் இருப்பதா வசைபாடுவது. இவற்றை எல்லாம் செய்பவர்களும் தமிழர்களே!!! எம் பலம் நம்பிக்கை கொண்ட ஈழத் தமிழன் என்பதுதான் இங்கு குறிப்பிட்ட விடயங்கள் மிகச்சிலதான் இருந்தாலும் இந்த விடயங்களையாவது வாசகர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம் என்பது ஒரு மன ஆறுதல் ஏனும் இருக்குமே என்பதுதான்.

சென்ற இதழ் கண்டு ஆத்திரம் உற்ற அன்பர்களுக்காக நாம் அனுதாபப் படுகிறோம். தமிழ் தேசியக் கூட்டமைப்போ அதன் தலைவர்களோ தமக்கு உள்ள தார்மீக பொறுப்புடன் செயற்பட்டால் எமது விமர்சனங்கள் தேவையுமில்லை எமக்கு எதிரியுமில்லை அவர்கள். அவர்களின் செயல் உள் நோக்கம் கொண்டவை, மன்னிக்க முடியாதவை அதனால் விசமர்சனம் செய்தோம். அதை கண்டிக்கும் உரிமை எடுத்துள்ள வாசகரை நாம் பாராட்ட முடியும்.

ஆனால் நடப்பது என்ன? தமிழர் மீதான போரை நிறுத்தி விட்டதாகக் கூறிய சிங்கள அரசு இன்னமும் தமிழ் மக்கள் மீதும் புனர் வாழ்வுத் திட்டம் என்ற மண்டை கழுவும் பயிற்சி முடித்து விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளை மீண்டும் தேடிக் கைது செய்கிறது. காரணம் ஐ.நா.சபைத் தீர்மானத்தை முறியடிக்க புலிகளின் தாக் குதல் பற்றிய அச்ச உணர்வைச் சிங்கள மக்கள் மத்தியில் வளர்க்கவும் சர்வதேசத்தின் கண்களில் மண்ணைப் போட்டு ஐ.நா.வில் தனக்கு ஆதரவைத் திரட்டவும் தன்னை அப்படித் தயார்ப் படுத்துகிறது.

சிங்களம் தனது போரை நிறுத்தி 7 ஆண்டுகள் போய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களுக்கு நன்றி

6வது ஆண்டில் அகரம்

விட்டன. ஆனால் போரின் நடுவில் மண்ணையும் மக்களையும் அழிவில் தள்ளி விட்டு ஓடி ஒளிந்த தலைவர்கள் ஏன் நாடு திரும்பினார்கள்? திரும்பியதும் தமக்குள் அடித்துக் கொள்வது ஏன் எதற்காக என்பதை அவர்களால் வெளிப் படையாகக் கூற முடியமா?

அவர்கள் தமக்குள் அடித்துக் கொள்வதால் அங்கும் இங்கு புலத்திலும் கட்சி அடிப்படையில் மக்கள் பிரிந்து தமக்குள் அடித்துக் கொள்ளும் நிலை ஏற்படுத்தியதும் அதனால் தமிழரின் சர்வ தேச அரசியல் செயற்பாட்டில் முரண்பாடுகளும் மோதல்களும் எமது இனத்தின் அடுத்த கட்ட அரசியலை அடியோடு தகர்த்து நிற்கிறதே அது யார் குற்றம்? குறைந்த பட்சம் போர் குற்ற விசாரணையும் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நீ தியும் நிவாரணங்களும், மீள் வாழ் வளித்தல் செயற்பாடுகளிலும் இவர்கள் ஏதாவது கவனம் செலுத்தினார்களா?

த.தே.கூ. கட்சிகளுக்குள் உள்ள போர் வர வரத் தீவிரமாகி தமிழ் அரசுக் கட்சி ஒன்றுதான் தனியான தனித்துவமான தலைமைக்கு ஏக போக உரிமை கொண்டாட முடியும் என்ற நிலையை யாரால் நியாயப் படுத்த முடியும்? கொதித்து எழும் வாசகர் சிந்திக்க வேண்டாமா?

தமிழனை எவ்வளவுதான் அடிச்சாலும் பேசாமல் காலில் விழுகிறானே என அனைத்து உலகமும் வியக்கும் அளவுக்கு எமது நிலை வந்து விட்டது. தமிழகத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் 1948 முதல் 242 தடவைகள் தமிழ் மக்களுக்கு எதிரான படு கொலைகள் கொள்ளைகள் தீ வைப்புக் குற்றங்கள் சிங்கள அரசுகளால் கட்டவிழ்த்து விடப்பட்டன என்ற ஆவணப் படுத்தப்பட்ட ஆதாரங்களுடன் டாக்டர் சிவமோகன் என்பவர் வெளிப் படுத்தி யிருக்கிறார். இந்த எண்ணிக்கையில் 1915 மற்றும் 1933 கலவரங்கள் உள்ளடக்கப்பட வில்லை. மற்றும் அன்றாடம் அரசின் சிங்களக் குடியேற்ற வாசிகளால் தமிழ் மக்கள் கொல்லப் படுவதும் விரட்டப் படுவதும் ஆவணப் படுத்தப் படாத நிகழ்வுகளாக உள்ளன.

இந்த அளவுக்கு எமது தலைவர்கள் செயற்படாது விட்டாலும் இந்தியா அவுஸ்திரேலியா உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றில் எமது உறவுகள் அகதித் தஞ்சம் பெற முடியாமல் அன்றாடம் தவிப்பதற்கு எதிராக அந்த நாட்டு அரச அதிகாரிகளுடன் மனிதாபிமானக் கோரிக்கை கூட வைத்தது உண்டா? ஆனால் காலம் தப்பாமல் கடல் கடந்து பறந்து போய் காசு பணம் தேடி வந்து கட்சி அரசியல் மட்டும் நடத்தும் களவாணித் தனத்தில் மட்டும் யாரும் சளைத்தவரில்லை என்பதை காண்கிறோம்.

எருமை மாட்டுக்கு மழை பெய்வது தெரிந்தாலும் தெரியும் ஆனால் எங்கள் அரசியல் வாதிகளுக்கு தலையில் இடி விழுந்தாலும் தெரிந்து கொள்ளும் உணர்வே இல்லாத ஜன்மங்களாக நடந்து கொள்கிறார்கள். இவர்களால் யாருக்கு என்ன நன்மை? இப்படி எழுதுவதால் அகரம் வெளிவருவதை முடக்குவதற்காக எமது விளம்பரதாரரை அச்சுறுத்துவதோ மிரட்டுவதோ எம் மக்களுக்கான தீர்வாக இருக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்தாலே போதும்.

1940களில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழ் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கிய போது மானம் உள்ள தமிழ்ச் சாதி என எம் இனத்தின் பெருமை பேசித்தான் 50க்கு 50து என்ற சம உரிமைக் குரலை மேடைகளில் எழுப்பினார். அந்தக் குரலுக்கு உரம் கொடுக்க வந்தவர்கள்தான் செல்வநாயகமும் வன்னிய சிங்கமும். அவர்கள் பிரிந்ததால் தமிழினம் எத்தகைய பெரிய இழப்புக்கு அடிகோலிச் சென்றனர் என்பதை இப்போதாவது நாம் நினைத்துப் பார்க்க வேண்டாமா?

அன்று மானம் உள்ள தமிழ்ச் சாதியாக வாழ்ந்த தமிழ் இனம் மானம் கெட்ட இனமாக தமிழர் தேசியம் என்று பாடித் தட்டேந்திப் பிச்சை கேட்கிறது செல்வாவின் தமிழ் அரசுக் கட்சி. பிச்சை கேட்பதிலும் தனக்கே முன்னுரிமை வேண்டும் என்கிற புத்தி என்று மாறும்?

சூடு சொரணை என்பது உப்பு புளி மிளகாய் சேர்த்துச் சாப்பிடுவதால் வந்து விடாது. அது பிறப்பால் மட்டுமே வரக் கூடியது. எங்கள் தலைவர்களுக்கு இவற்றை வரவைப்பது நாய் வாலை நிமிர்த்துவதற்கு ஒப்பாகும். வடிவேல் கமெடி மொழியில் சொல்வதானால், முடியல.

மீண்டும் சந்திக்கும் வரை நலம் வேண்டி விடை பெறுவது,

அகரம் குழுமம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதை விடப் பச்சையாய் இலங்கையில் தமிழனுக்கு இடம் இல்லை என எப்படிச் சொல்ல முடியும்?

**த.எதிர்மன்னசிங்கம்.**

இலங்கை திரும்பும் தமிழரை விமான நிலையத்திலோ ஊருக்குள் சென்ற பின்னரோ அரசின் காவல் துறை அல்லது படையினரின் புலனாய்வுப் பிரிவு கைது செய்து சிறையில் அடைத்து வருகிறது. இதில் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் என்ற வேறுபாடு கிடையாது. இந்தக் கொடுமையை, விபரீதப் போக்கை புதிதாக வடக்கின் ஆளுநராகப் பதவி ஏற்ற திரு.ரெஜினோல்ட் குரே இப்படிக் குறிப்பிட்டார், "வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தமிழர்களையும் நல்லாட்சி அரசாங்கம் சிறையில் அடைத்துக் கொண்டிருப்பதாக".



நல்லாட்சி பற்றிய தமது இன்னொரு கருத்தை முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் இப்படிக் குறிப்பிடுகிறார். "இன்றைய நல்லாட்சி என்று சொல்லப்படும் கூட்டாட்சி அரசாங்கத்தில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு வெறும் பேச்சளவிலேயே தென்படுகிறது. மாறாக தமிழ் மக்கள் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும் நிறை வேற்றப் படாமல் நம்பகத் தன்மை அற்றதாக தென்படுகிறது."

சென்ற நவம்பர் மாதம் 13ம் திகதி இந்த நல்லாட்சி அரசு விடுதலை செய்த 39 அரசியல் கைதிகளில் ஒருவரான கிளி நொச்சியைச் சேர்ந்த விஜயகுமார் கேதீஸ்வரன் என்ற அரசியல் கைதி மீண்டும் இப்போது கைது செய்யப் பட்டு அல்லது கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்.

புலம் பெயர் தமிழரை மீண்டும் வாருங்கள் உங்கள் பணத்தையும் அறிவையும் கொண்டு நாட்டைக் கட்டி எழுப்புங்கள். உங்கள் உறவுகளின் துன்பச் சுமைகளைக் குறையுங்கள். இப்படி சிங்கள அரசு அமைச்சர்களும் அரை வேக்காட்டு அறிவு ஜீவிகளும் முதலைக் கண்ணீர் வடித்து ஆலோசனைகளை அள்ளி வீசுகிறார்கள். முன்னாள் போராளிகளுக்கு முதுகு தேய்த்துக் குளிப்பாட்டி விடுங்கள் என முகமனுக்கு கரிசனை மழை பொழியும் பலரையும் காண்கிறோம்.

ஆனால் இவற்றின் பின்னால் உள்ள இன அழிப்பு வேலைத் திட்டங்களுக்கான சர்வ தேச அங்கீகாரம் ஒளிந்து கிடப்பதை யாரும் சரியாகக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. இவை அனைத்துக்கும் பின்னால் சிங்கள இனவாத அரசுகளின் தமிழின அழிப்பின் கோர முகம் மறைந்து கிடப்பதை வட மாகாண சபை முதல்வர் திரு. விக்கினேஸ்வரன் அவர்களின் பின் வரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்று பெரிய கடலடி பனி மலையின் கடுகளவு சிறு முனைதான் என்பதை புரிந்து கொள்வதே இன்னமும் பலருக்கு மிகப் பெரிய இமாலய சாதனையாக உள்ளது.

யாருக்காவது சிந்திக்கும் திறனும் திருந்தி வாழும் மனமும் இருந்தால் கீழ்க் காணும் வரிகளின் பின்னால் மறைந்துள்ள அழிவையும் ஆபத்தையும் அறிந்து செயற்படும் ஆற்றலை வடக்கின் முதலமைச்சரின் பின்வரும் கூற்று தெளிகை; கொடுக்கும்.

"கடந்த 10ம் திகதி முல்லைத் தீவு கொக்குத் தொடுவாய் வடக்குப் பகுதியில் சட்டத்துக்கு மாறாக வந்து தங்கிய சிங்கள மீனவர்களால் கிராமசேவர் தாக்கப்பட்ட சம்பவத்தில் இராணுவம் சிங்கள மீனவர்களுக்கு ஒத்துழைப்பை வழங்கி இருக்கிறார்கள். இந்நிலையில் தேசியப் பாதுகாப்பின் பெயரால் முப்படையினர் நிறுத்தி வைக்கப் படுகிறார்கள். ஆனால் தேசியப் பாதுகாப்புக்காக அவர்கள் இங்கே இல்லை. அவர்கள் சிங்கள பௌத்த மயமாக்கலை பாதுகாப்பான முறையில் மேற் கொள்ளவே படையினர் இங்கே இருக்கின்றார்கள்.




முல்லைத் தீவு மாவட்டத்தில் மஹிந்த ஆட்சியில் கடற்றொழில் அமைச்சராக இருந்த றாஜித சேனாரத்ன மற்றும் தற்போதைய கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோர் குறித்த சிங்கள மீனவர்களை வெளியேற்றுவோம் எனக் கூறியும் அவர்கள் வெளியேற்றப் படவில்லை. அவர்களுக்கு படையினர் பாதுகாப்பு வழங்குகிறார்கள் என்றால் இங்கே நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியலும் சிவில் நிர்வாகம் நடை முறைக்கு வரவில்லை மாறாக மஹிந்த ஆட்சிக்கு ஒப்பான கோரமான ஆட்சியே நடக்கிறது. இது பற்றி ஜனாதிபதியுடன் பேசப்படும் என முதலமைச்சர்", கூறி உள்ளார் என்கிறது செய்தி.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் நாட்டில் தற்போது அபிவிருத்தியைக் காண முடியவில்லை. மின்சாரம் துண்டிக்கப்படுகிறது, பொருட்களின் விலைகள் அதிகரிக்கப் படுகின்றன. புதிய அரசாங்கம் வாக்குறுதிகளை தாறுமாறாக மீறி வருகிறது. இந்த அரசு நாட்டை துரிதமாக அபிவிருத்தி செய்வதாகக் கூறியே வேகமாகப் பழிவாங்கி வருகின்றனர். அதை மட்டும் நன்றாகச் செய்கின்றனர் என்கிறார்.



இப்படிப் பல முகங்கள் பல உண்மைகளை வெளிப் படுத்தும் பொழுது அரசின் வெளி உறவுத் துறையின் இரு முரண்பட்ட முகங்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கடந்த ஒரு வருட காலமாக வெளி உறவு அமைச்சர் புலம் பெயர் தேசங்களிலும் கொழும்பிலும் விடுத்து வரும் அழைப்பு மிகப் பிரபலமானது. புலம் பெயர் தமிழ் மக்கள் தமது பொருள் மற்றும் அறிவு வளங்களை தாய் நாட்டின் அபிவிருத்திக்கும் தாயக உறவுகளின் மேம்பாட்டுக்கும் பயன்படுத்த வேண்டும் என அழைப்பு விடுத்து வருகிறார். இந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் புலம் பெயர் மக்களின் ஒன்று கூடல் திருவிழாவையும் ஒழுங்கு செய்து உலக நாடுகளுக்கு ஒரு கார்னிவல் திருவிழா விளம்பர மழை மாரி பொழிந்து வருகிறார்.

சிங்களத்தின் குணாம்சம் தெரிந்த அனைவருக்கும் தெரியும் இது ஒரு ஐ.நா.மனித உரிமைகள் சபை அமர்வுகளுக்கான பனி மழை என்பது. ஆனால் சந்தர்ப்ப வாதிகளும் ஏமாளிகளும் ஏமாற்றுப் பேர்வழிகளும் வந்து இந் விழாவில் கூத்தடிப்பார்கள் எனபது நிச்சயம். அது அவர்களின் தலைவிதிப்போல் அமைந்து விட்டுப் போகட்டும். ஆனால் இங்கு இதே வெளியுறவு அமைச்சரின் மற்றொரு முகத்தையும் பார்பது அவசியமாக உள்ளது.

இலங்கை அரசின் பாது காப்பு அமைச்சு மார்ச் மாதம் 3ந் திகதி தனது இணையத் தளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்துள்ள அறிவித்தலில் வடக்குக்கு பயணிக்கும் வெளிநாட்டில் வாழும் இலங்கையருக்கு முன்னதாகவே இலங்கை இராணுவத்திடம் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையை அறிவித் திருக்கிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களுக்கும் ,மன்னார் மாவட்டத்தில் விடத்தல் தீவுக்கு வடக்கிலும் ஓமந்தை வடக்கும் இவ்வாறு இராணுவ அனுமதி பெற வேண்டிய பகுதிகளாக அறிவிக்கப் பட்டுள்ளன. ஆனால் இராணுவமும் சிங்கள அதிகாரிகளும் தமக்கு பட்ட விதத்தில் நேரம் ஒரு கட்டுப்பாடு நிபந்தனைகளை விதிப்பதையே தமிழ் மக்கள் படும் அனுபவமாக உள்ளன. இப்போது உள்ள அறிவித்தலின் பிரகாரம் பலமுறை அனுமதியுடன் கூடிய அதிக பட்ச காலமாக 3 மாத விசா பெற விண்ணப்பிக்க முடியும் என்ற நிபந்தனை தரப்பட்டுள்ளது.

இப்படியான தாயகம் தேசியம் உங்களது கனவுத் தேசமாக இருந்தால் போங்கள் உங்கள் பணத்தைக் கொட்டிவிட்டு வாருங்கள். அதன் மூலம் இன்னும் சில ஆயிரம் சிங்கள மக்களை உங்கள் பூர்வீக நிலத்தில் குடியமர்த்தி வாழ்வளித்த பெருமையும் புண்ணியமும் உங்களுக்குக் கிடைக்கும். உங்களில் எவருக்காவது சூடு சொரணை தில் இருந்தால் சிங்கள அரசு கொழும்பில் கையகப் படுத்திய தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் வங்கி வைப்பான பல மில்லியன் ரூபாய்களை ஏன் போரினால் பாதிப்டைந்த எமது மக்களின் மறு வாழ்வுக்கு பயன்படுத்தக் கூடாது எனக் கேட்கலாம்.

கிளிநொச்சியில் தமிழீழ வைப்பகங்களில் கைப்பற்றிய பல கோடி பணமும் தமிழ்ப் பொது மக்களின் அடைவு நகைகளுமாக டன் கணக்கில் எடுத்துச் செல்லப்பட்ட பணமும் தங்கமும் எங்கே ? அவை எம்மக்களுக்கே திருப்பிக் கொடுக்காது விட்டாலும் அவற்றை அவர்களின் மறுவாழ்வுக்கு பயன்படுத்த வேண்டாமா எனவும் கேட்கலாம்.

நீங்கள் மனிதாபிமானம் மிக்க மனிதராக இருந்தால் பறி கொடுத்த தமது நிலங்களை மீளப் பெறப் போராடும் இந்த மக்களையும் ஒரு முறை நேரில் பார்த்து நலம் கேட்டு ஆறுதல் கூறி வாருங்கள். தந்தை செல்வா தமிழினத்தை ஆண்டவனிடம் பாரப் படுத்தி பல ஆண்டுகளாகியும் ஆண்டவனால் கைவிடப் பட்ட இனமாக நாம் இருக்கிறோம். இனி நாமாக எதுவும் செய்யாமல் எந்த ஆண்டவனும் காப்பாற்ற வரமாட்டான். எம்மைக் கட்டி ஆளும் ஆண்டான்கள்தான் வந்தார்கள் அழித்தார்கள். வருகிறார்கள் அழிக்கிறார்கள். வருவார்கள் அழிப்பார்கள்.

எமக்கு எமது ஆண்டவனையும் தெரியாது. எம்மை ஆள வருபவனையும் தெரியாது. அதனால் வேறு படுத்திப் பார்த்து எதிர் வினையாற்றி எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளவும்தெரியாது. ஈழத் தமிழ் இனப்படு கொலையை உலகத் தமிழினத்தின் தலைவனாக வேடிக்கை பார்த்து மகிழ்ந்த தி.மு.க.தலைவர் கருணாநிதியின் சார்பாக யாழ்ப்பாணம் வந்திருந்த தி.மு.கவின் எம்.பி., டி.ஆர்.பாலு அவர்கள், உங்களுக்கும் தலைவர் கலைஞர்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று கூறியதன் பொருள் என்ன?

இந்தியாவும் தமிழகமும் எம்மை என்ன செய்தாலும் அவர்களின் தலைமையை நாம் ஏற்றே ஆக வேண்டும் என்பதுதானே அவர்களின் நோக்கம்? அவர்களின் மனோநிலை சிங்களத்தின் மனோ நிலைதான் என்றுதானே அர்த்தம்? காங்கிரஸ்தான் அப்படி! பா.ஜ.க. வந்தால் எல்லாம் மாறிவிடும் என நினைத்தோமே பா.ஜ.க. வந்ததுதான் வந்தது, அது சிங்களத்துடன் சேர்ந்து எங்களின் அனைத்து வளங்களையும் அள்ளிப் போகிறது.

சர்வதேச அரங்கில் சிங்களத்தின் பக்கமே நின்று செயற்பட்டது, செயற்படுகிறது.

அதன் துணைத் தூதுவர் இன்று யாழ்ப்டணத்தில் எமக்கு இரண்டாவது ஆளுநராகச் செயற்படுகிறார். அங்கே சிங்கள மொழியோடு இந்தியும் புகுந்து விட்டது. சாரியும் தாவணியும் கும்மி கோலாட்டமும் போய் சல்வார் கமிஸம் குஜராத்தி தாண்டியா ஆட்டமும் தலை காட்டுகின்றன. எல்லா நற்றமிழ் பண்புகளின் கோட்டையாக விளங்கிய யாழ்ப்பாணம் சென்னை பம்பாய் ஹொங் ஹொங் வழிக்கு மாறி வருகிறது.

இனிமேலும் வடக்கோ தெற்கோ இந்தியாவை நம் தோள்களில் இருந்து தூக்கி எறிந்தால் மட்டுமே நம் இனம் உயிர் பிழைக்க முடியும் என்பதே யதார்த்தம். ஆனால் மெத்தப் படித்த மனித உரிமை செயற்பாட்டாளரும் புலிகளின் தத்துப் பிள்ளை போல் தம்மை அடையாளப் படுத்தும் பாரீஸ் பிரமுகர் இந்தியாவை பகைத்து நாம் வாழ முடியாது எனப் பிரச்சாரம் செய்கிறார். 1920 முதல் கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் அறிவு ஜீவிகளால் தமிழ் இனம் அழிவை நோக்கி விரைந்து ஓடுகிறது. இந்த நிலையில் ஒளிக்கத் தெரியாதவன் தலையாரி வீட்டில் ஒளிக்க முயல்வது போன்ற செயலில் நாம் இறங்க முடியுமா? எனவும் சிந்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Orient Textiles and Jewellery

25வது ஆண்டு நிறைவைமுன்னிட்டு தொடர் மலிவு விற்பனை!

PRICE DOWN




25 ஆண்டுகளாக எம்மோடு பயணித்த அனைத்து வாடிக்கையாள அன்பர்களுக்கும் எமது நன்றிகள்!!!

உரிமையாளர்: S.ஜெகதீஸ்

Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany

Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36

சிறுவர்களுக்கான ஆடைவகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையில் நல்லாட்சியும் ஜனநாயகமும் உருவாக்கப்பட்டு விட்டதா?

**மனோ**

*1948 முதல் 242 தடவைகள் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டனர் (முஸ்லீம்களும் உட்பட).*

இப்படி இன்று ஒரு துணிச்சலான கருத்தை எம்மிடையே தெரிவிக்க இலங்கை நல்லாட்சியில் அரசியல் சுதந்திரம் இருக்கிறது என யாரும் தவறாக நம்பி விடாதீர்கள். இப்படி பெரிய உண்மையைத் தமிழ் நாட்டில் நடந்த ஊடக அறிவாளர் கருத்தரங்கில் டாக்டர் சிவ மோகனால் பேச முடிந்துள்ளது. அதுவும் முந்தைய உலகத் தமிழர் தலைவன் கருணா நிதியின் ஆட்சியில் என்றால் சாத்திமாகியே இருக்க முடியாது. இப்போதும் கூட தமிழ் நாட்டில் தேர்தல் சட்ட விதிகள் கொடுத்த சுதந்திரம் இக்கருத்துகளை அறிய வைத்துள்ளது.

இலங்கையில் இங்கினியாகல என்ற சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்ட தமிழர் பகுதியில் 1956 ல் கரும்புத் தோட்டத் தொழிலாளிகள் 150 பேரை சிங்களக் காடையர் கொல்லப்பட்டது முதல் 2009 முள்ளிவாய்க்கால் படு கொலைகள் வரை 242 தடவைகள் தமிழ் மக்கள் படுகொலைகள் இடம் பெற்றதைப் பட்டியல் இட்டுப் பேசி உள்ளார் டாக்டர் சிவமோகன். இந்த அளவுக்குப் பட்டியல் தயாரிக்கும் ஈழத் தமிழரில் எத்தனை பேர் உள்ளனர்?

இத்தகைய உதாசீனப் போக்கு எம்மக்கள் மத்தியில் நிறைந்து கிடப்பதால்தான் மிக இலகுவாக எம்மினம் அழிக்கப்;பட்டு கிடக்கிறது. இப்படி ஒரு இன மக்கள் இலங்கையில் வாழ்ந்தார்கள் அவர்கள்தான் அத்தேசத்தின் பூர்வ குடிகள் என்ற வரலாறு இன்று இல்லாது அழிக்கப்படுகிறது. உலக நாடுகள் எங்கும் சிதறி வாழும் எம் அடுத்த தலைமுறை தமிழ் மொழியும் தமிழர் வரலாறும், தமிழ் பேசும் மக்கள் இல்லாத கூட்டமாக மாறி வருகிறது. ஏறக் குறைய இதே நிலைதான் வடக்கு கிழக்கு தாயக தேசத்திலும் உருவாகி வருகிறது.

அகிம்சை வழியிலான அரசியல் உரிமை ஆர்ப்பாட்டங்கள் உண்ணா விரதங்கள் காந்திய வழி சத்தியாக் கிரகங்கள் அனைத்தும் அரச ஆயுத அடக்கு முறைக்கு உள்ளானதால் ஆயுத விடுதலைப் போராக மாற்றம் பெற்றது. மீண்டும் அமைதிவழிப் பேச்சை நாடிய பொழுது உலக அரசுகள் இந்தியாவின் தூண்டுதலில் அதையும் முறியடித்து இனப் படு கொலையை நடத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியான விசாரணைகளோ நிவாரண உதவிகளோ போர் இழப்பீடுகளோ இல்லாமல்: தமிழரின் நிலங்கள் வளங்கள் பறிப்புகள், கைதுகள் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்படாமலும் பாரிய உரிமை மீறல்களுக்குத் தமிழ் இனம் தொடர்ந்தும் சிக்க வைக்கப்பட்டு வருகிறது.

ஒரு நாட்டு மக்கள் தமது அடிப்படை வாழ்வியல் உரிமைகளையும் அரசியல் வேட்கைகளையும் அமைதியான வழியில் வெளிப்படுத்துவது ஜனநாயக ஆட்சித் தத்துவங்களின் ஆணி வேர் ஆகும். இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்ற இன்றைய ஆட்சியிலும், பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக இருந்த அன்றைய ஆட்சிகளின் போதிலும் கூட அங்கு வாழ் தமிழ் பேசும் மக்களான இஸ்லாமிய, மலையாள, இந்திய வம்சாவளி மக்கள் 1915 முதல் 1948ல் விடுதலை பெறும் வரை பௌத்த சிங்கள பெரும்பான்மை மக்களின் இனவாத தாக்குதல்களுக்கும் கொலை கொள்ளை போன்ற படுபாதக குற்றங்களுக்கும் ஆளான கலவரங்கள் நிறையவே உண்டு.

அவை இடம் பெற பல தசாப்தங்களுக்கு முன்னரே பிரித்தானிய அரசின் ஆட்சியில் தமிழ் மக்களும் தமிழர் பிரதேசமும் புறக்கணிப்புக்கு ஆட்படுவதைக் கண்டித்து வட புலத் தமிழ் மக்களின் அரசியல் விழிப்புணர்வை 1859 முதலாகத் தட்டி எழுப்பியவர். தமிழ் மக்களின் விடுதலைக் கோரிக்கைக்கு முதல் வித்திட்ட பெருமான் ஒரு சிறந்த சைவ சமய ஆன்மீக தமிழ் சமூக செயற்பாட்டாளராக வாழ்ந்து காட்டிய தமிழ் பெரியார் நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலராவர்.

ஆனால் அவர் தம்மை வாழவைத்த கிருத்துவ மிஷனரியையும் அதற்கு ஆதரவான ஆங்கிலேய வடமாகாண அரச அதிபரான துவைனம் துரையையும் எதிர்த்தும், தமிழையும் சைவத்தையும் போற்றி வளர்த்த காரணத்தாலும் தமிழ் மக்களின் வரலாற்றிலிருந்து அன்று முதல் திட்டமிட்டு மறைக்கப பட்டார். அப்படியான தமிழ்ப் பெரியாரின் அரசியல் வரலாற்றுக் கொலைக்கு அறிந்தோ அறியாமலோ பயன்படுத்தப் பட்ட தமிழ் வாலிபர் சங்கம் வட்டுக் கோட்டைக் கல்லூரி எனப் புகழ் பெற்ற நிறுவனத்தின் கிறிஸ்தவக் கல்லூரியின் மாணவர்களாக இருந்து விட்டமை தற்செயலான நிகழ்வாக இன்று எடுத்துவிட முடியாது.

இந்த அமைப்பு புனித நூலான கிறிஸ்தவ விவிலியத்தை முதலில் நல்ல தமிழில் மொழி பெயர்த்து கொடுத்தவர் ஆறுமுக நாவலரே என்பதை மறைத்தும் மறந்தும் தமிழ் மக்களின் மனங்களில் ஒரு தலைவராக இடம் பெற விடாமல் செய்து தமிழரின் அரசியலின் போக்கை மடை மாற்ற உதவியது. இத்தகைய பாரிய அரசியல் திருப்பத்தை சிங்கள பௌத்த இனவெறி அரசியலுக்கு ஆதரவாக ஏற்படுத்தியதை இன்னமும் நாம் ஒரு தற்செயல் அரசியல் நிகழ்வாக எப்படிக் கருத முடியும்? இதில் நிச்சயமாக ஆங்கிலேய ஆட்சியாளரின் பின்புல சக்திகளும் செயற்பட்டிருக்கும் வாய்ப்பும் உள்ளது என்பதை நாம் மறந்து விடலாகாது. குறிப்பாக அது வழங்கிய சேர் பட்டங்கள் முழுக் குடும்பத்தையும் தத்தெடுத்துவிட்டதை காண்கிறோம்.

அந்தப் பணியில் பின்னர் கொழும்பை வாழ்விட அரசியலாக பிரித்தானிய ஆட்சியாளரை திருப்திப் படுத்தும் மேட்டுக்குடி வாசியான சேர்.பொன். அருணாசலம் வடக்கே போய் இன்று சம்பந்தன் அளித்து வரும் வாக்குறுதி போன்ற ஒன்றை வழங்கி வெற்றி கரமாகத் தமது பணியைச் செய்து முடித்தார். சிங்கள பௌத்த இனவாத அரசியல் தழைத்து ஓங்க இவர்களின் தற்கொலை அரசியலே தமிழ் இனம் முற்றாக இலங்கை மண்ணில் இருந்து அழிக்கப்பட உதவியது.


அருணாசலம் விட்ட தொட்ட குறைகளை வவுனியா பிரதிநிதியான சீ. சுந்தரலிங்கம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், செல்வ நாயகம், அமிர்த லிங்கம் இன்று மாவை சேனாதிராசா, சுமந்திரன் போன்றோரும் மிகச் சிறப்பாக நிறைவு செய்து விட்டனர். ஒரு காலத்தில் வடக்கு கிழக்கை ஆண்ட ஆள் புலமாகக் கொண்டிருந்த தமிழரின் தாயகம் இன்று முஸ்லீம்கள் என்ற புது மத வெறி அடையாளத்தோடு பிளவுப் பிறப்பெடுப்பதைக் காண்கிறோம்.

இதுதான் சிங்கள பௌத்த இனவாத அரசியல் பிரசவித்த அவமானக் குழந்தை. இப்படி தமிழ் பேசும் முஸ்லீம்கள் என 60 ஆண்டுகளுக்கு முன்னர் போற்றி வளர்த்த தமிழ் பேசும் முஸ்லீம்கள் சகோதரம் இன்று ஆரும் அற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானக் குழந்தையாக தன்னை அடையாளப் படுத்தும் பொழுது, தமிழ் பேசும் கிருஸ்தவக் குழந்தை நாளை என்ன பேசப் போகிறது ?

இப்படி மத வாதத்தால் தமிழ் இனத்தையும், தமிழ் மொழி இனத்தையும், தமிழரின் மரபுவழித் தாயக தேச அடையாளத்தை இழந்து விட்டால் இலங்கை எவருடைய தேசமாக தேசியமாக இருக்கப் போகிறது என்பதை தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் முடிவு செய்ய வேண்டி வரும்.



அப்போது அவர்களின் தாய் மொழி தமிழா? சிங்களமா? அரபியா ? இன்று அழகு தமிழில் தமிழ் பேசி இந்து முஸ்லீம் வாக்காள மக்களை ஏமாற்றி அரசியல் நடத்தும் ரவூப் ஹக்கீமும், அதாவுல்லாவும் பஷீர் முகமத்தும்? முஸாமிலும், தமிழ் பேசும் முஸ்லீம் மக்களின் நாளைய தினத்தையும் சந்ததியையும் நினைத்துப் பார்க்க மறுக்கும் தூரப் பார் அற்ற நிறக் குருடு அரசியலை செய்கிறார்கள் என்பதே உண்மை.

இதே நிறக் குருடு அரசியலை மேற்கொண்ட தமிழ் இனம் பல மடங்கு பெரும் பான்மையாக இருந்த இலங்கை இந்திய வம்சாவளிகள் நிலை இன்று என்னவாகிக் கிடக்கிறது? வடக்கு கிழக்கு, வன்னி, யாழ்ப்பாணி, மட்டக்களப்பு என்று பிரிவினைகளை வளர்த்து இன்று நாடும் வீடும் தேசமும் வாழ்வும் இழந்த அகதி தமிழ் இனமாக கட்டவிழ்ந்த நெல்லிக் காய் மூட்டை போல் உலகம் எங்கும் சிதறிக் கிடக்கிறது. ஒரு காலத்தில் தூய நற் தமிழுக்கும் தமிழரின் ச ங்க கால நாகரிகப் பண்புகளின் உறைவிடமாக திகழ்ந்த வடக்கு கிழக்கு என்ற தமிழர் தாயகம் யாழ்ப்பாணமாக குறுகி இன்று அங்கும் அனைத்துலக அநாகரிக கலாச்சாரம் முற்றாக அழித்துவிட்ட நிலைக்கு வந்து விட்டது. உமறுப் புலவர் போன்ற எத்தனை இஸ்லாமிய தமிழ் அறிஞர்களைக் கண்ட தமிழினம் இன்று எங்கே போனது?



இன்று வடக்கு மக்களின் அடிப்படை அரசியல் உரிமை பேசும் குற்றத்துக்காக வடமாகாண முதலமைச்சர் முன்னாள் நீதி யரசர், எல்லா நற்பண்புகளின் அடையாளமக விளங்கும் திரு.சீ.வீ.விக்கினேஸ்வரன் நீதி(?)மன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் ஏற்றித் தண்டனை வழங்க சிங்களம் தயாராகி வருகிறது. அவருக்குத் துணையாக அடையாளத்துக்காக சம்பந்தனும் ஒரு வேளை அரசியல் இலாபத்துக்காக மாவையாரும் சுமந்திரனும் சிறீதரனும் கூட நீதி மன்றம் ஏறி மீண்டும் ஒரு றையல் அற் பார் காட்சியை அரங்கேற வைக்கலாம்.

ஆனால் உலகறிய நடைபெற்ற அமைதிப் பேச்சை முறித்து ஒரு தமிழ் இன அழிப்புப் போரையே வெற்றி கரமாக நடத்திக் காட்டிய சிங்கள பௌத்த இனவெறிக்கு முன்னால் அதற்கான நீதியைக் கூட கேட்டுப் பெற முடியாத இன்றைய தமிழ் அரசியல் தலைமையால் வழி நடத்தப்படும் எமக்கு எப்படி விடிவு கிடைக்கும்? இன்று இலங்கையில் வல்லாதிக்க அரசுகள் அமைத்துக் கொடுத்த அதே சி ங்கள பௌத்த மதவெறி நாயகர்கள் நடத்தும் நல்லாட்சி அரசை நமக்கு ஏற்றது அல்ல என எப்படி உலகை நம்ப வைக்க முடியும்?

அங்கே ஆளுங்கட்சி எதிர்க் கட்சி என்ற பேதமே காண முடியாது. அப்படியான ஒரு கலப்பியல் ஆட்சியில் எதிர்க் கட்சியின் தலைவராக இருப்பவர் ஆளுங்கட்சியை ஆட்சியில் ஏற்றி வைத்த தமிழர் தலைவர் சம்பந்தன். பாராளுமன்ற குழுவின் துணைத் தலைவர் மேதகு தமிழ் மக்கள் விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தைக் கூட்டத்தில் எது வெள்ளாடு எது கறுப்பாடு எது நாய் எது ஓநாய் என யாரால் கண்டு பிடிக்க முடியும்?

வேடிக்கை என்ன வென்றால் இனப்படு கொலை வெறும் போர்க் குற்ற விசாரணையாக மாறி அதை சர்வதேச நீதி விசாரணை என மாற்றி பின்னர் உள்நாட்டு வெளிநாட்டு பொறி முறை என மாற்றி இன்று உள்நாட்டு விசாரணை என மாற்றி அதுவும் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான விசாரணை என நாளொரு மேனியும் பொழுதொரு நிறமுமாக மாயா ஜால வித்தை காட்டப் பட்டு வருகிறது.

இவ்வளவு கொடுமைகளையும் சகித்து வரும் தமிழ் இனத்தின் மீது மதத்தின் பேரால் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தாமாக விலகி நின்று அரசியல உரிமைகளை எவ்வாறு பெறலாம் அல்லது அனுபவிக்கலாம் என நம்புகிறார்களோ தெரிய வில்லை. ஆனால் சிங்கள பௌத்த இனவெறி எப்படித் தமிழ் இன அழிவுக்கு உதவி செய்ததோ அதே பணியைத்தான் இஸ்லாமிய மத வெறி அரசியலும் தமிழ் இன அழிப்புக்குச் செய்தது செய்கிறது என்பதையும் அவர்கள் ஏற்கும் காலம் வந்து விட்டது.

செல்வநாயகம் தமிழ் அரசுக் கட்சி எனத் தமது கட்சிக்குப் பெயர் வைத்தது தப்பாக இருக்கலாம். ஆயினும் அக்கட்சியின் கொள்கை வரைவில் தமிழ் பேசும் இஸ்லாமிய மக்கள் என்றே முஸ்லீம் மக்களை உள்ளடக்கி அரசியலைச் செய்தார். அப்படி அப்பெயர் இஸ்லாமியத் தலைவர்களுக்கு ஏற்க முடியாது என அன்றே காரியப்பர், மன்சூர் மௌலான போன்ற தலைவர்கள் கூறியிருந்தால் இன்று தமிழர் கவலைப்பட ஏதும் இருக்காது. ஆனால் தமது அரசியல் தலைமைகளால் தமிழ் இனம் முதுகில் குத்தப்பட்டு இறந்து போகிறது என்பதை நல்ல இஸ்லாமியத் தமிழ் அன்பர்கள் தெரிந்து கொண்டு உளமார நம்பினால் அது ஒன்றே தமிழ் இனத்துக்கு சாந்தி தரும். சிங்களத்தல் கொல்லப் பட்டவர்களில் முஸ்லீம்களே கிடையாதா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலி பினான்ஸ்

ANCHALI FINANZ

# Anchali Finanz GmbH

Buchenweg 6 , 4554 Etziken (SO)

Tel.: 032 614 40 51 Fax: 032 614 40 64

Natel: 079 302 56 67 info@anchali.com

## குறைந்த வட்டிவீதத்தில் வங்கிக்கடன்

# 9.95%

சுவிஸ்சில் B அல்லது C மற்றும் Swiss பத்திரங்கள் உள்ளவர்கள் எம்முடன் மேல்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு கடன் பெறும் தொகையையும் அதன் விபரங்களையும் எமது தாய்மொழியாம் தமிழில் அறிந்து கொள்ளலாம்.

01.07.2016 முதல் அதி கூடிய வங்கிக்கடன் வட்டி 10 வீதம்.

எமது நிறுவனம் வாடிக்கையாளர்களிடம் எவ்வித முகவர்கட்டணமும் அறவிடுவதில்லை.

உங்களின் தேவையே எங்களின் சேவை.

உங்களின் பணத்தேவையைப்பூர்த்தி செய்யக்காத்திருக்கும்

– அஞ்சலி பினான்ஸ் நிர்வாகம் –

anchali.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles




ஒவ்வொரு வருடமும் தை மாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100CHF என 12 மாதம் 1200CHF. இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.

**Neugasse 58, 8005 Zürich, Switzerland**

**www.nsjewellery.com**

**info@nsjewellery.com** **Tel: 044 440 60 50** **Fax: 044 440 60 52**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கையின் மாற்றங்கள்!

வண்ணை தெய்வம்

பத்து வருடங்களுக்கு முன்னர் தான் அவமானத்துடன் "வேண்டாம் இந்த ஊர்" என ஓடிப்போன ஊருக்கே பொன்னுத்துரை இன்று மீண்டும் திரும்பி வருகின்றான்!

எப்படி வருகின்றான்? அன்று... கசங்கிய சட்டையும், ஆறு மாதமாக தொடர்ந்து போட்டுக் கொண்டிருந்த லோங்சும், தேய்ந்த பாட்டா சிலுப்பரும், கையில் ஒரு பிளாஸ்ற்றிக் பையில் ஏதோ இரண்டு உடுப்புக்களுடன் ஊரை விட்டுப்போன பொன்னுத்துரை இன்று.... முற்றிலுமாக மாறி வெளிநாட்டில் பிரபலமான "அடிடாஸ்" பெனியன், "லோட்ஸ்" டெனிம், சிலுப்பருக்குப் பதில் விலை உயர்ந்த சப்பாத்து, கையில் ஒரு சூட்கேஸ், என பலரும் மதிக்கக் கூடிய ஒருவனாக மீண்டும் தான் வாழ்ந்த ஊருக்கு திரும்பி வருகின்றான் பொன்னுத்துரை!.

பிரான்ஸில் இருந்து கொழும்பு வரையும் சொகுசாக விமானத்தில் பறந்து வந்தவன் கொழும்பில் இருந்து எட்டுப்பேர் செல்லக்கூடிய வாகனம் ஒன்றில் பத்துப்பேருடன் ஒருவனாக பயணித்து யாழ்ப்பாணம் வந்து. அங்கிருந்து ஒரு ஆட்டோ வாகனம் மூலமாக தனது சொந்த ஊரான கொக்குவில் வரைக்கும் வந்தவன் பிரதான வீதியிலேயே ஆட்டோவை விட்டு இறங்கிவிட்டான். பிரம்படியில் இருக்கும் தனது வீடு வரைக்கும் செல்வதற்கு இன்னும் ஒரு கிலோ மீற்றர்வரை செல்லவேண்டும்.

பந்தாவாக வீடுவரைக்கும் ஆட்டோவிலேயே சென்று இறங்கியிருக்கலாம்! ஆனால் அதை அவன் மனம் ஏற்கவில்லை. தான் சிறு வயது முதல் நடந்து திரிந்ததும், ஓடி விளையாடியதுமான அந்த வீதியில் இன்றும் நடந்து போகவே ஆசைப்பட்டான்.

இந்தப் பதினைந்து வருடங்களில் ஊரில் பல மாற்றங்கள்! ஓலை வீடுகள் பல கல் வீடுகளாகவும், கல் வீடுகள் சில மாடி வீடுகளாகவும் மாறியிருந்தது! இது ஊரில் பலர் வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள் என்பதற்கு சாட்சியாக இருந்தது. ஆனாலும் அந்த வீதி மட்டும் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட கூடுதலாக குன்றும் குழியுமாகவே இருந்தது!. இருந்தாலும் அந்த வீதியில் நடந்து செல்வது அவனுக்கு குழந்தைப் பருவத்தில் தாயின் தோழில் சாய்ந்து கிடந்த சுகத்தைக் கொடுத்தது!.

வீதியின் சந்து முனையில் வளர்ந்து சடைத்திருந்த இலுப்பை மரம் இன்னும் சற்றுப் பெருத்திருந்தது. அது இலுப்பைப்பழக் காலமானதால் வௌவால்களின் கூட்டமும் அதிகமாகவே இருந்தது. வீதியில் இரண்டு சிறுவர்கள் தன்னைக் கண்டு ஒதுங்கிப் போவது புரிந்தது. நிட்சயமாக அவர்கள் தன்னை அடையாளம் கண்டு ஒதுங்கவில்லை என்பது பொன்னுத்துரைக்குத் தெரியும். காரணம் அவர்களுடைய வயது பத்து, அல்லது பன்னிரண்டு வயதுதான் இருக்கும்!;. பின் என்ன காரணமாக இருக்கும்? தனது உடை மட்டுமல்ல ஊருக்குள் புதிதாக ஒருவர் வருகின்றார் என்ற ஆச்சரியமாகவும் இருக்கலாம்.

அப்பொழுது அவ் வழியே வந்த ஒரு பெரியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று நிதானமாக தனது மூக்குக் கண்ணாடியை உயர்த்தி பொன்னுத்துரையைப் பார்த்தார். பொன்னுத்துரைக்கு அவரை அடையாளம் தெரிந்தது. ஊரில் உள்ள மிகப் பெரிய புகையிலை வியாபாரியாகத் திகழ்ந்த ஜயம்பிள்ளை முதலியார்,தான் அவர்.

"தம்பி ஆர்? ஊருக்குப் புதிசோ?" ஜயம்பிள்ளை முதலியார் விடுப்பு விசாரித்தார்.

"ஜயாநான்பிரம்படிச்சந்தியிலைசலூன்வைச்சிருந்த பொன்னையாவின் மகன் பொன்னுத்துரை. பதினைஞ்சு வருசமா பிரான்ஸிலை இருந்தனான். அம்மாவுக்குச் சுகமில்லையென தகவல் வந்திது அதுதான் வந்தனான்."

"எட மயிர் வெட்டுற பொன்னையன்ரை மகனோ?! வெளிநாடுகள் இப்ப எல்லாரையும்தான் மாத்திப்போட்டுது!" முதலில் தம்பி என்று அழைத்த மரியாதை மாறி இப்பொழுது அவரின் கதையிலும், பார்வையிலும் ஒரு மாற்றம் தெரிந்தது.

ஜயம்பிள்ளை முதலியாரின் மகனும் பிரான்ஸில்த்தான் இருக்கின்றான். மகனின் பிரான்ஸ் வாழ்க்கையைப்பற்றி பாவம் இந்த தகப்பனுக்குத் தெரியாது போலும்! இவர் இன்னமும் பழைய சுருட்டு வியாபாரியாகவே இருக்கின்றார்.

"பிரான்ஸிலை என்ன வேலை செய்யிறாய்? அங்கையும் மயிர்தான் வெட்டிறியோ? இல்லை." இந்தக் கேள்வியில் அருவருப்புத் தெரிந்தது! இவங்களும் வெளிநாடுகளுக்குப் போய் உழைக்க வெளிக்கிட்டிட்டாங்கள் என்ற வெறுப்புத் தெரிந்தது.

"ஜயா ஜரோப்பிய நாடுகளிலை நாங்கள் வேலை செய்யிறோமா எண்டுதான் பாக்கிறாங்கள். எங்கடை ஊர் மாதிரி என்ன வேலை செய்யிறம் எண்டதைப் பாக்கிறேல்லை. உங்கடை மகனும் பிரான்சிலைதானை இருக்கிறார் கேட்டுப் பாருங்கோ தெரியும்"


ஜயம்பிள்ளையருக்கு பொன்னுத்துரையின் பதிலின் அர்த்தம் அப்பொழுது புரியவில்லை. ஆனால் அவருடைய பார்வையில் "பணம் வந்த திமிரிலை பதிலுக்குப் பதில் பேசுகிறாங்கள்" என்கிற வெறுப்புத் தெரிந்தது!. இது பதினைந்து வருடங்களுக்கு முன்னர் தெரிந்த அதே வெறுப்பு!

பொன்னுத்துரை பதினைந்து வருடங்களுக்கு முன்னர் எப்படியாக


IM

Milin Impex GmbH

ஆசிய, ஆபிரிக்க உணவுப் பொருட்களின்
மொத்த மலிவு விற்பனையாளர்கள்



தமிழர்களுக்கு தேவையான
அனைத்து விதமான உணவுப்
பொருட்களின் மொத்த,
சில்லறை விற்பனை நிலையம்

www.milinimpex.de

Westendorfstr. 41, 44287 Dortmund

Tel: 0231 459617/28, Fax: 0231 1815288, info@milinimpex.de


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஊரில் அவமானப்பட்டான்?

தான் படிக்கின்ற காலத்திலேயே லீவு நாட்களில் கடைக்கு அழைத்து கையில் கத்தியைக் கொடுத்து சவரம்செய்யச்சொன்னார்தந்தை! அது அவனுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் தந்தைக்குப் பயந்து செய்யவேண்டியிருந்தது. தன்னுடன் ஒன்றாகப் படிக்கும் சக மாணவர்களுக்கே முடிவெட்டுவது அவனுக்கு அவமானமாக இருந்தது! அதன் பின்னர் அந்த மாணவர்கள் கல்லூரியில் தனது சாதியைச் சொல்லி கிண்டல் செய்த போதெல்லாம் அவமானத்தில் கூனிக் குறுகிப்போவான். அப்படிக் கிண்டல் செய்பவர்களில் முக்கிமானவன் இந்த ஐயம்பிள்ளை முதலியாரின் மகன் சுகுமாரன்தான். அது மாத்திரமல்ல பாடங்களிற்கு சரியான விடை கள் தெரியாத சமயங்களில் ஆசிரியர்கள்கூட "இங்கை என்ன சிரைக்கவோ வாறியள்?" எனத் திட்டும்போது தற்கொலை செய்து கொள்ளலாமா என எண்ணிய நாட்களும் உண்டு!

தன்னுடன் படிக்கும் சக மாணவர்களில் சிலர் லீவு நாட்களில் கமம், நெசவு வேலை, தச்சு வேலை, என தங்கள் தந்தை செய்யும் வேலையை செய்பவர்களும் உண்டு. ஆனால் அவர்களை யாரும் பரிகாசமாகப் பார்ப்பதில்லை. அவர்களை மதிப்பாகவே பார்த்தார்கள்! ஆனால் இந்த முடி வெட்டும் தொழிலை மட்டும் ஊரில் யாரும் மதிப்பதில்லை!

தங்களிடம் வந்து முடிகளைத் திருத்தி பழிச்சென்று முகச்சவரம் செய்து அழகாகச் செல்பவர்கள் தங்கள் தொழிலை மட்டும் கேவலமாகவும் இழிவாகவும் கருதுவது பொன்னுத்துரைக்கு அவமானமாக இருந்தது. ஆனால் அவன் தந்தையோ "குலத் தொழிலைச் செய்வதில் என்ன அவமானம்? பிச்சை எடுப்பதுதான் அவமானம்" எனச் சொல்லி கடையில் வேலை செய்ய வைத்தார்.

செய்யும் தொழிலில் கேவலமில்லைத்தான். ஆனால் தனது நண்பர்களும், மற்றவர்களும், அதைக் கேவலமாகக் கருதுவது அவனுக்கு அவமானமானதாக இருந்தது. இந்த அவமானத்தை மூன்று வருடங்கள் தாங்கியபடி உழைத்த பொன்னுத்துரை ஒருநாள் தன்னுடைய சேமிப்போடு தாயாரின் ஒரு சில நகைகளையும் எடுத்துக்கொண்டு ஊரைவிட்டு வெளியேறியவன் சில நண்பர்களின் உதவியோடு பிரான்ஸ் சென்று விட்டான்.

தொடரும்...





சூரிச் மாநகரில்


# அபிரா டெக்ஸ்டைல்



**தமிழ் புத்தாண்டு மற்றும் 10 ம் ஆண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

**பெண்களுக்கான காப்பு, காதணி வகைகள் மிக மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்**

எங்கள் மலிவு விற்பனையில் நீங்கள் ஆவலோடு எதிர்ப்பார்த்திருக்கும் திருமணபட்டுப்புடவைகள், பட்டு வேஷ்டிகள், மற்றும் புத்தம் புதிய பஞ்சாபி வகைகள், சோளி ஹிட் வகைகள், சீகுயின்ஸ் சாறிகள், புதிய வகையான சாறிகள் மற்றும் சிறுவர்களுக்கான கோட், சூட், சேட், சர்வாணி வகைகள் அனைத்தும் நீங்கள் இதுவரையில் எங்கும் பெற்றுருக்காத வகையில் மிகுந்த மலிவு விலையில் கொள்வனவு செய்ய ஒரே சந்தர்ப்பம் ஒரே இடம்... அது அபிரா டெக்ஸ்டைல்.




**APIRAA TEXTILES STAUFFACHER STR - 149, ZURICH - 8004**

**PH: 0041 432335454, FAX: 0041 432 43 99 57**

**E-MAIL : kannanzh@hotmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்து (பெரும்)குடி மக்கள்...

வண்ணை தெய்வம்

மண்வாசனையில் இங்கு பதியப்படுவது யாழ்ப்பாணத்தில் சட்டரீதியாகவும், சட்டத் திற்குப் புறம்பாகவும் இயங்கிய மதுபான விற்பனை நிலையங்களும்! அந்த மதுபானச் சாலைகளை வளர்த்துக்கொண்டிருக்கும் பெரும் குடிமக்களைப் பற்றியும்தான்!. இன்று யாழ்ப்பாணத்து இளைஞர்களை மதுபோதையில் வைத்திருப்பதற்காக அரசாங்கம் மது விற்பனை நிலையங்களை அதிகமாக்கிக் கொண்டே இருக்கும் இவ் வேளையில் பழைய நினைவுகளையும் இங்கு இரை மீட்கின்றோம்....

முதலில் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முந்தய நினைவுகளை இரைமீட்போம் அப்பொழுது சாராயம் மட்டும் குறிப்பிட்ட இடங்களில் தவறணைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டது. பனை, தென்னை மரங்களில் இருந்து பெறப்படும் கள்ளு விற்பனை அதனை உற்பத்தி செய்யும் தனி நபர்களிடமே விடப்பட்டிருந்தது. ஆனால் சாராயத்தை உற்பத்தி செய்யும் உரிமை அரசாங்கத்திடம் மட்டுமே இருந்தது.

யாழ்ப்பாணம் சாராயத்தவறணை யாழ்-முற்றவெளிக்கு மிக அண்மையில் இருந்ததது. பல வருடங்களாக இந்த தவறணையை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தவர் ஏரம்பு என்பவராகும். குடிமக்களில் அதிகமான பெருங்குடி மக்கள் கரையூர் என அழைக்கப்பட்ட குருநகர்ப் பகுதியில்த்தான் வசிக்கின்றார்கள் என்பதை கருத்தில்க் கொண்டு அவர்களின் வசதிக்காக (நல்ல நோக்கம்) அரசாங்கம் குருநகரிலும் ஒரு சாராயத் தவறணையை திறக்க அனுமதித்திருந்தது. இது சாராயத்தவறணைக்கு மட்டுமல்ல 1974ல் கள்ளுக் கொட்டில் முறைகள் ஒழிக்கப்பட்டு கள்ளுத் தவறணை முறை வந்த பின்பு குருநகரிலும் இரண்டு கள்ளுத் தவறணைகள் திறக்க அனுமதித்திருந்தார்கள்! குருநகர் தவறணை-இலக்கம்-1 என்னும் பெயரில் குருநகர் கஸ்ற்ரம்ஸ் அலுவலகத்திற்கு முன்னால் உள்ள ஜெற்றி என அழைக்கப்படும் துறைமுகத்திற்கு அருகினிலும், குருநகர் தவறணை இலக்கம்-2 என்னும் பெயரில் யாழ்ப்பாணம் கலால் திணைக்களத்திற்கு முன்னாலும் அமைத்திருந்தார்கள்.

அன்று கள்ளு விற்கும் இடங்களை கள்ளுக் கொட்டில் என்றுதான் கூறுவார்கள்! யாழ்ப்பாணத்தில் மற்றய ஊர்களைவிட அதிகமான கள்ளுக் கொட்டில்கள் இருந்த பிரதேசமும் குருநகரே! இதற்கு முக்கிய காரணம் குருநகரில் 90 வீதமான மக்களின் பிரதான தொழில் கடற்தொழில்தான். அவர்கள் கடலுக்கள் தொழிலுக்குச் சென்று திரும்பும்போது கடற்காத்தைச் சுவாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்ததால் ஏற்படும் தாகமும், இரவு முழுக்க நித்திரை முழிப்பதனால் ஏற்படும் ஒருவிதமான மனச்சோர்விற்கு மருந்தாகவும் அவர்கள் தொழிலால் வந்ததும் முதலில் செல்வது கள்ளுக் கொட்டில்களை நாடித்தான்.

யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் எல்லாம் கள்ளு இறக்கும் தொழிலில் ஈடுபடுபவர்கள் மட்டுமே அதை விற்பனை செய்வதற்காக ஒரு இடத்தில் கொட்டில் அமைத்து விற்பனை செய்வார்கள். ஆனால் குருநகரில் கள்ளுக்கொட்டில் வைத்திருக்கும் பலர் ஏனைய கடை முதலாளிகளைப்போல வெள்ளை வேட்டியும், மடிப்புக் கலையாத சட்டையும் போட்டு மைனர்களைப் போலவே காட்சியளிப்பார்கள்! அவர்களுக்கு கள் இறக்கும் தொழிலைப்பற்றி எதுவுமே தெரியாது! அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் கள் இறக்கும் தொழில் தடை செய்யப்பட்டிருந்ததனால் அங்கு தொழில் செய்ய முடியாமல் இருந்த பலர் விசா இல்லாமல் (அவர்களுக்கு விசா எடுக்கும் முறை தெரியாது) கள்ளத்தோணி மூலமாக யாழ்ப்பாணம் வந்து இப்படியான தொழில் தெரியாத வெள்ளைவேட்டி முதலாளிகளுக்கு கள் இறக்கிக் கொடுப்பார்கள். இவர்கள் கதிரையில் இருந்து காசை வாங்கிக்கொண்டு கள்ளை அளந்து ஊத்துபவர்களாக இருப்பார்கள்! இதிலும் சிலர் அந்த கள்ளை அள்ளி ஊற்றும் வேலைக்குக்கூட ஒரு பெடியனை வேலைக்கு வைத்திருப்பார்கள்! இவர்கள் மேற்பார்வை செய்து கொண்டு முடிவில் காசை கணக்குப்பார்த்து எண்ணிக்கொண்டு போபவர்களாகவே இருப்பார்கள்!

இன்னொரு சுவார்சியமான செய்தி! யாழ்ப்பாணத்தில் அடுத்தடுத்து பல நகைக்கடைகள்! அதேபோல அடுத்தடுத்து பல புடவைக்கடைகள் இருப்பதைப்போல குருநகர் டேவிற் வீதி, ராஜேந்திரா வீதி போன்றவைகளில் அடுக்கடுக்காக கள்ளுக்கொட்டில்கள் வரிசையில் இருக்கும்! எல்லாக் கொட்டில்களிலும் குடிமக்களின் வரவு அதிகமாகவே இருக்கும்!

யாழ்ப்பாணத்தில் எல்லா ஊர்களிலும் கள்ளுக் கொட்டில்களும், களவாக சாராயம் விற்கும் மையங்களும் நிறையவே இருந்தன! இவை தவிர தாங்கள் இறக்கும் கள்ளை தங்களது வீடுகளில் வைத்தே விற்றுக்கொள்பவர்களும் நிறைய உண்டு. இதே நேரத்தில் அரசாங்கத்திற்குத் தெரியாமல் களவாகச் சாராயம் காச்சி விற்பவர்களும் இருந்தார்கள்! அந்தச் சாராயத்திற்கு "கள்ளச் சாராயம்" "பட்டைச் சாராயம்" "ஊறல்ச் சாராயம்" கசிப்பு என பலவிதமான பெயர்கள் உண்டு! அன்றைய நாளில் கள்ளச் சாராயம் காச்சுவதில் உரும்பிராய்தான் பிரசித்தி பெற்ற ஊராக இருந்தது! அங்கு காச்சும் சாராயத்தை உரும்பிராயச் சாராயம் என்றும் சொல்வார்கள்.

இப்படியாக களவாக உற்பத்தி செய்பவர்களையும், விற்பனை செய்பவர்களையும் பிடிப்பதற்கென்றே பொலிஸ் பிரிவைப்போல எக்சைஸ் என்னும் கலால் திணைக்களம் தனியாக இருந்தது. இந்த திணைக்களம் குருநகர் கடற்கரை வீதியில் பொலீஸ் நிலையத்திற்கு சற்று முன்பாக ஒரு பழைய கட்டிடத்தில் இயங்கி வந்தது! இந்த கலால் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் நடைபெறும் விற்பனைக்கேற்ப ஒரு தொகையை மாதா மாதம் வாங்கிக்கொண்டு களவாக சாராயம் காச்ச, விற்க அனுமதி கொடுத்துவிடுவார்கள். கலால்த்துறையினர் எங்காவது களவாக மது விற்பனை செய்தவர்களைப் பிடித்தார்களானால் பிடிபட்டவர்கள் இவர்கள் கேட்ட தொகையை லஞ்சமாக கொடுக்காதவர்களாகத்தான் இருப்பார்கள்!.

அன்று யாழ்ப்பாணத்தில் லஞ்சம் கொடுத்தால் எதுவும் செய்லாம் என்ற திணைக்களமாக இருந்தது கலால் திணைக்களம்தான்! உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால் யாழ்ப்பாணம் கலால் திணைக்களத்திற்கு முன்னால் இருந்தது 2ம் இலக்க குருநகர் கள்ளுத் தவறணை. அதற்கு முன்னால் ஒரு ரேஸ்ற்கடையும் இருந்தது. தங்கள் இலாக்காவிற்கு முன்னாலேயே இருந்த ரேஸ்ற் கடையிலேயே லஞ்சம் வாங்கிக்கொண்டு களவாக சாராயம் விக்க அனுமதித்தவர்கள் என்றால் உங்களால் நம்ப முடிகிறா? இன்னும் கொஞ்சம் கூடுதலாகப் பணம் கொடுத்தால் தங்கள் காரியாலயத்தில் வைத்தே சாராயம் விக்க அனுமதிப்பார்களோ? என்னும் அளவிற்கு இருந்தது அன்றைய காலால் திணைக்களம்!.

சாராயத்தை பகிரங்கமாகவே, களவாக விற்பவர்களின் விற்பனைமுறையே மிக வினோதமானது! யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபலமான முட்டாசுக்கடைச் சந்தியில் (இது யாழ்ப்பாணம் சாராயத் தவறணைக்கு அண்மையியே உள்ளது) சாமி என்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோர்க்கடை ஒன்றை நடாத்தி வந்தார். திருவாளர் சாமி அவர்கள் நெற்றியில் மூன்று கோடுகள் போட்ட திருநூற்றுப் பட்டை! பெரிய சந்தனப் பொட்டு! இப்படியாக பாப்பதற்கும் அசல் சாமி பக்தர் போலவே காட்சியளிப்பார்! ஆனால் அங்கு பார்வையாளர்களை ஏமாற்ற சும்மா ஒரு பார்வைக்காகத்தான் மோர் விற்கப்படுகின்றது என்பது பரம ரகசியம்!. அங்கு முக்கியமான வியாபாரமே சாராயம்தான்! அங்குள்ள கடைகளில் மூட்டை தூக்கும் தொழிலரளர்கள், மற்றும் வண்டில் இழுக்கும் தொழிலாளர்களென ஏராளமானவர்கள் சாமி மோர்க்கடையின் வாடிக்கையாளர்கள்!.

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டருக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் அழகர்சாமி சாப்பாட்டுக்கடை சாராய வியாபாரத்திற்கு பெயர்பெற்ற மற்றுமொரு கடையாகும்! இங்கு தவறணையில் விற்பனையாவதைவிட கூடுதலான வியாபாரம் நடைபெறும்! குடிப்பதற்கு பக்கபலமாக இறைச்சி வகையிலான ரேஸ்ற் வகைகள், குடித்து முடிந்த பின்னர் சாப்பாட்டு வசதியென அனைத்தும் இருப்பதனால் லோங்ஸ் போட்ட படித்தவர்கள் முதல் யாழ்ப்பாணத்துச் சண்டியர்கள்வரை ஏராளமானவர்கள் அழகர்சாமியின் வாடிக்கையாளர்கள்!

யாழ்ப்பாணம் தட்டாதெருச்சந்திக்கு மிக அண்மையில் இருப்பது வைரமுத்து மாமாவின் சாராயக்கடை. யாழ்ப்பாணத்தில் வைரமுத்து மாமாவைத் தெரியாதவர்கள் குடிகாரர்களே அல்ல! அவ்வளவு பிரபலமானவர். மிகச் சாந்தமான முகம், யார் எந்த வெறியில் வந்தாலும் அன்பான வரவேற்பு! இவையெல்லாம் அவரின் வியாபாரத் தந்திரங்கள் என்று சொல்லாம்! மாலை ஐந்து மணிக்குத்தான் கடையைத் திறப்பார். மறுநாள்க் காலை ஒரு மணி, இரண்டு மணிவரை கடை திறந்திருக்கும்! சனி, ஞாயிறு, போயா தினம் போன்ற விடுமுறை நாட்களில் மட்டும் பகலிலும் திறப்பார்! இலங்கை அரசாங்கச் சட்டப்படி ஒருவரிடம் எப்பொழுதும் இரண்டு போத்தல் சாரயம்தான் இருப்பில் இருக்கலாம் அதனால் மாமா தனது கடைக்கு வெளியே வீதியில் இவருடைய ஆட்களின் சைக்கிள்களில் உள்ள பைகளில் எப்பொழுதும் ஒவ்வொருவரிடமும் இரண்டு போத்தல் சாராயம் இருக்கும்! கடையில் சாராயம் முடிய முடிய ஒருவர்மாறி ஒருவராக தாங்கள் வைத்திருக்கும் வைத்திருக்கும் சாராயப் போத்தல்களை கடைக்கு மாற்றிவிடுவார்கள்! எத்தனையோ இளம் பெடியளையெல்லாம் பெரும்குடி மகன்களாக உருவாக்கிவிட்ட வைரமுத்து மாமா தனது வாழ்நாளில் எப்பொழுதுமே சாராயத்தைக் குடித்தது கிடையாது என்பது விந்தையான செய்தி!!

உதாரணத்திற்காக மூன்று கள்ளச் சாராயக்கடைகளை இங்கு சொல்லி வைத்தேன். இதுபோல இன்னும் நூற்றுக்கணக்கான சாராயக்கடைகள் இருக்கின்றன! இனி கள்ளுக் கொட்டில்களையும், கள் குடிமக்களையும் பார்ப்போம்!

கள்ளுக் குடிப்பவர்களில் இரண்டு வகையானவர்கள் இருக்கின்றார்கள்! வெறிக்காகக் குடிப்பவர்கள் ஒரு வகையினர்! குஷிக்காகக் குடிப்பவர்கள் இன்னொரு வகையினர்! வெறிக்காக் குடிப்பவர்கள் தென்னங்கள்ளைத்தான்குடிப்பார்கள்! குஷிக்காக் குடிப்பவர்களுடைய தெரிவு பனங்கள்ளுத்தான்! புதிய புதிய குடிமக்களை உருவாக்குவது இந்தப் பனங்கள்ளுத்தான்! வேலை நிமித்தமாக யாழ்ப்பாணத்தைவிட்டு கொழும்பு போன்ற தூர இடங்களுக்கு சென்றவர்கள்கூட பனங்கள்ளு சீஷன் வந்தவுடன் இதற்காகவே லீவு போட்டுவிட்டு யாழ்ப்பாணம் வந்துவிடுவார்கள்! பனங்கள்ளுக்கு அப்படியானதொரு மவுசு உண்டு!

இன்று பெரும்குடி மன்னர்களாக இருக்கும் பலருக்கு வழிகாட்டியே பனங்கள்ளுத்தான்! என்றால் நம்புவீர்களா? உடம்பு மெலிவான பிள்ளைகளுக்கு ஒரு பனைக் கள்ளு கொடுத்தால் உடம்புக்கு நல்லதென்று தாங்களே வைத்தியர்களாக மாறி பிள்ளைகளுக்கு பனங்கள்ளு வாங்கிக் கொடுத்து அவர்களுக்கு கள்ளின் ருசியை ஏற்படுத்திய பெற்றோர்களும் உண்டு! பின்பு அவர்கள் நண்பர்களுடன் பனங்கள்ளு குடிக்க வெளிக்கிட்டு பின்பு பனங்கள்ளு கிடைக்காத காலத்தில் தென்னங்கள்ளு குடித்து! அதன்பின் சாராயத்திற்கு மாறி பெரும் குடிகாரர்களாக மாறியவர்களும் உண்டு! ஆரம்பத்தில் யாராவது பார்த்துவிடப்போகின்றார்களே என்ற பயத்தில் ஒரு போத்தல் கள்ளை ஒரே முடறாகக் குடிக்க ஆரம்பித்தவர்கள்தான் பிற்காலத்தில் ஒரு கிளாஸ் சாராயத்தை ஒரே முடறாகக் குடிக்கும் பெரும்குடி மன்னர்களாக மாறி பின்பு காலையில் நித்திரையால் எழுந்தவுடன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைநடுக்கம் எடுபடுவதற்கு கண்டிப்பாக குடித்தே ஆகவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டவர்களும் உண்டு! இவையெல்லாம் குடிகாரர்கள் உருவாகிய விதங்களில் சில உதாரணங்கள்!

யாழ்ப்பாணத்தில் பனங்கள்ளுக்கென பிரபலமான இடம் ஆனைக்கோட்டைதான்! தை மாதம் பிறந்தால் ஆனைக்கோட்டையில் உள்ள மாணிக்கம் என்பவரின் கள்ளுக்கடையில் நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாப்போலவே குடிமக்களின் கூட்டம் நிரம்பி வழியும்! ஆனைக்கோட்டையில் மட்டும் பதினைந்துக்கும் மேலான பிரபலமான கள்ளுக்கடைகள்; இருக்கின்றன! இவை தவிர அனேகமான வீடுகளிலும் கள் விற்பனை நடைபெறும்! ஆனாலும் மாணிக்கத்திடம்தான் வாடிக்கையாளர்கள் அதிகம்! அவரிடம் மட்டும் பத்திற்கும் மேற்பட்ட கள்ளிறக்கும் தொளிலாளர்கள் இருந்திருக்கின்றார்கள்!.

கள் இறக்கும் தொழிலாளர்களில் அனேகமானவர்கள் படிப்பறிவு குறைந்தவர்களாகவே இருந்ததனால் அவர்களிடம் இலஞ்சம் வாக்குவதற்காக கலால் அதிகாரிகளின் தொல்லைகள் அதிகமாக இருக்கும்! இதை சமாளிப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டதுதான் "வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம்" இதன் தலைவராக இருந்தவர் இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியைச் சேர்ந்த எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள். இவர் பின்னாளில் இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியின் சார்பாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினராகவும் நியக்கப்பட்டிருந்தார். கள் இறக்கும் தொலிலாளர்களுக்காக சங்கம் உருவாக்கப்பட்ட பின்னர் அவர்கள் கள் இறக்குவதற்கும், கள் விற்பதற்குமான அனுமதிப் பத்திரங்கள் எடுக்கும் வழிமுறைகள் எல்லாம் சுலபமாக்கப்பட்டதால் அதன் பின்னர் கலால் அதிகாரிகளின் கெடுபிடிகளும் குறைவாகவே இருந்தன.

நல்லூர் அரசடியில் குழந்தை என்பவரின் கள்ளுக்கடை பிரபலமானது! இவருக்கு வயதாகிவிட்டதால் சம்பளத்துக்கு ஆட்களை வைத்துத்தான் கள் இறக்கி வந்தார். அதில் அனேகமானவர்கள் இந்தியத் தமிழர்கள். இவர்களை அந்த நாட்களில் வடக்கத்தையார், கள்ளத்தோணி என்றுதான் அழைப்பார்கள்! இந்தியர்களை வேலைக்கு வைப்பதில் இவர்களுக்கு இன்னொருவகை லாபமும் உண்டு! அது அவர்களுக்குப் பாதிச் சம்பளம்தான் கொடுப்பார்கள்! (சில சமயங்களில் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய சம்பளப்பாக்கி பெரிய தொகையாக வந்துவிட்டால் "இவன் விசா இல்லாமல் இருக்கின்ற கள்ளத்தோணி" என பொலிசாருக்கு காட்டிக் கொடுத்துவிட்டு! பொலீஸ் வந்து பிடித்த பின்னர் "உன்ரை காசு என்னட்டை இருக்குத்தானே நான் நல்ல லோயரை வைத்து உன்னை வெளியாலை எடுக்கிறன்" என்று கூறி அவர்களை அப்படியே அந்தரத்தில் கைவிட்டவர்களும் உண்டு!) இதேநேரம் முறையாக விசா எடுத்து வரும் தொழிலாளர்களை பல முதலாளிகள் தங்களிடம் வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை.

குழந்தையரின் கள்ளுக்கடை காலை பத்துமணியளவில் திறக்கப்படும். அனேகமான வாடிக்கையாளர்கள் நேரத்துடனேயே வந்தாலும் கள்ளுக் குடிக்காமல் காவல் இருப்பார்கள்! காரணம் பதினொரு மணியளவில்த்தான் குழந்தையரின் ரேஸ்றகடை திறக்கப்படும்! குழந்தையரின் ரேஸ்றகடையில் குடல்க்கறி மிகப் பிரபலமானதாம்!

ரேஸ்றுக்குப் பிரபலமான இன்னொரு இடம் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தில் உள்ள கந்தையா என்பவரின் கடைதான்! இங்கு குடிக்க வருபவர்கள் கந்தையாவின் ரேஸ்ற் சாப்பிடுவதற்காகத்தான்!. அவித்த மரவெள்ளிக்கிழங்கு, நண்டு, இறால், மீன் பொரியில் இப்படி பலவிதமான கறிவகைளில் ரேஸ்ற் செய்து வைத்திருந்தாலும் இவரிடம் கணவாய்க்கறி சாப்பிடுவதற்கென்றே வரும் வாடிக்கையாளர்கள்தான் அதிகம்! "கணவாய்க் கந்தையா" என்றால்த்தான் அனேகமானவர்களுக்கு இவரைத் தெரியும்!

1974ம் ஆண்டு இலங்கையின் நிதி அமைச்சராக இருந்த டொக்டர் என்.எம். பெரேரா அவர்கள் கள் இறக்கும் தொழிலை கூட்டுறவு முறையில் கொண்டுவந்ததன் பின்னர் யாழ்ப்பாணத்தில் கள் விற்பதற்காக தவறணைகள் திறக்கப்பட்டன. இதனால் ஆனைக்கோட்டை மாணிக்கம், அரசடி குழந்தை உட்பட குருநகரில் கள்ளுக்கடைகள் வைத்திருந்த மிகப் பெரிய பெரிய முதலாளிகளெல்லாம் முடங்கிப் போனார்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு கள் இறக்குபவர்கள் கண்டிப்பாக கள் இறக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராக இருக்க வேண்டும்! தாங்கள் இறக்கும் கள் அனைத்தையும் தவறணைக்குத்தான் கொடுக்கவேண்டும்! என சட்டங்கள் கொண்டுவரப்பட்டதால் வீடுகளில் கள் விற்பவர்களும் குறைந்துவிட்டடார்கள்! இதனால் கள்ளுக்குடிக்கும் மக்கள் தரமான கள்ளுக் கிடைக்காமல் பரிதவித்துப் போனார்கள் என்றால் அது மிகையில்லை!

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கள் இறக்கும் தொழிலாளர்கள் குறைந்துவிட்டதால் பெரும்பாலான கள்ளுக்குடி மக்களெல்லாம் சாராயக்குடி மக்களாக மாறிவிட்டார்களாம்! அதனால் கசிப்புச் சாராயம் காச்சுபவர்களின் தொகை அதிமாகிக்கொண்டே போகின்றதாம்!

அதேநேரத்தில் குடிமக்களின் தொகை குறைந்துவிடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் அரசாங்கம் சந்திக்கு சந்தி (டீ)பார் என்று சொல்லப்படும் மதுபானக் கடைகள் திறக்க அனுமதி வழங்கியுள்ளதால்!. அந்தக் கடைகளில் சாராயத்துடன் பியர், சவுட் போன்ற நாகரீகக் குடிவகைகளும் தாராளமாக விற்கப்படுவதால் அனேகமான கள்ளுக்குடி மக்கள் பியர், சவுட் குடி மக்களாக மாறிவிட்டார்களாம்!

குடிமக்களும், மதுபானக் கடைகளும் அதிகரிக்க, அதிகரிக்க கலால் அதிகாரிகளுக்குத்தான் வேலையும் அதிகம்! வருமானமும் அதிகம்!

யாழ்ப்பாணத்து குடிமக்கள் பெருங்குடி மக்களாக பெருகிக்கொண்டே போகின்றார்கள்!

குறிப்பு:- பனை மரத்தில் கள் இறக்குவது, புளாவில் கள் குடிப்பது போன்ற படங்களைப் போட்டால் அழகாக இருக்கும். அல்லது ஒரு சாராயத் தவறணையின் படத்தைப் போடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

## பாகம் 52

-அன்புச் செல்வன்-



எமது இக் கட்டுரை தொடர் தொடங்கி 1 வருடம் முடிந்துவிட்டது. தொடங்கிய பொழுது சர்வதேச அரங்கில் ஈழத் தமிழரின் அரசியல் அரங்கில் அபிலாசைகளை மண் போட்டு மூடிவிடும் வெறியே மேலோங்கிக் காணப் பட்டது. இன்றும் அந்நிலையே தீவிரம் பெற்று வருவதை பின்னர் பார்ப்போம். ஆனாலும் இந்திய கம்மியூனிஷ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் தோழர் சீ.மகேந்திரன் முள்ளி வாய்க்கால் படு கொலைகளை பற்றி ஆனந்த விகடனில் ''வீழ்வேனென்று நினைத்தாயோ' என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளாக எழுதி இருந்தார். பின்னர் அதனை புத்தகமாகவும் விகடன் நிறுவனம் வெளியிட்டிருந்தது.



திரு. சி. மகேந்திரன்

எனக்கு அந்த தலைப்பு மிகப் பெரும் தூண்டுதலைத் தந்து இத்தொடரை எழுத வை த்தது. மேலும் திரு.மகேந்திரன் எப்படி தமக்கு ஈழப் பிரச்சினையில் இத்தனை ஆழமான ஈடுபாடும் ஆர்வமும் அக்கரையும் ஏற்பட்டது என்பதை இதே நூலில் குறிப்பிட்டுள்ளார். அதற்கு அவர் தமக்கு ஏற்கனவே கால் நூற்றாண்டுக்கு முன்னதாக ஈழத்து பல்துறை அறிஞர் மாமனிதர் பேராசிரியர் கா.சிவத்தம்பி மூலமாக ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றையும் அவர்களின் போராட்டத் தேவையையும் அறிந்து அவற்றால் தமக்குள் உயிர் பெற்றுவிட்டன எனக் குறிப்பிட்டுள்ளார்.

1957ல் திரு.சிவத்தம்பி அவர்களை கொழும்பு மருதானை ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய பொழுது அறிமுகமும் ஓரளவு பழக்கமும் ஏற்பட்டிருந்தது. அன்றைய தமிழ் கம்மியூனிஸ்ட் மற்றும் இடது சாரிச் சிந்தனையாளர்கள் இனப் பிரச்சினையை பொருளாதாரப் பிரச்சினை எனப் புறக்கணித்து தமிழ் அரசியல் உரிமைப் போரைப் புறந்தள்ளியே வந்தனர். பிற்காலத்தில் பேராசியரான திரு சிவத்தம்பி தமிழர் வரலாற்றை நன்கு தெரிந்தும் சிந்தனையாளர் வட்டத்தில் புலமைசார் அறிஞராக தமிழ் மொழி வித்தகராக, தமிழ் இலக்கண ஆசானாக போற்றப் பட்டதும் தமிழீழ விடுதலைப் போரை முழுமையாக ஆதரித்து தலைவரின் மதிப்பையும் பெற்றதனால் அவரால் இந்தியக் கம்மியூனிட் கட்சித் தலைமைக்குள்ளும் தமிழ் நாட்டில் செல்வாக்கு பெற வைக்க முடிந்தது. காங்கிரஸ் ஆட்சி அங்கே மாறியதும் பா.ஜ.க. ஆட்சியில் ஈழத் தமிழருக்கான விடியல் வரும் எனக் கனவு கண்ட பலருக்கும் ஏமாற்றம்தான் கிடைத்தது. ஏன் ? நாம் எதனைக் கவனிக்கத் தவறியதால் எமது எதிர்பார்ப்பு பிழைத்தது.?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் கா.சிவத்தம்பி

1990 முதல் உலக அரசியல் பெரு முதலாளிகளின் கைகளுக்குள் முழுமையாகச் சிக்கிக் கொண்டு விட்ட உண்மையை நாம் கவனிக்கத் தவறிவிட்டோம். உலகில் போர்களும் சமாதானங்களும் முதலாளி வர்க்கத்தின் தேவைக்கு ஏற்பவே அமெரிக்கா போன்ற வல்லாதிக்க அரசுகளால் நடத்தப் பட்டு வருகின்றன. இவற்றை அப்பாவி நாடுகளில் தொண்டு உதவி நிறுவனங்களாக, உலக வங்கி, உலக நாணய நிதியம் போன்ற அமெரிக்க அரசின் நிறுவனங்கள் மூலம் ஆபத்துக்கு உதவும் நட்பு அமைப்புகளாக செயற்பட்டு போரோ சமாதானமோ அதன் வழியே நாட்டின் ஆட்சி அதிகாரத்தை தமது கட்டுக்குள் கொண்டுவருகின்றன. பின்னர் அந்த நாடுகளின் வளங்களை முழுமையாகச் சுரண்டி முதலாளி வர்க்கத்தை கொழுக்க வைப்பதே அவற்றின் நோக்கமாக உள்ளது. இதுதான் ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா, சிரியா, ஈழம் என இன்று நாம் காணும் போர்களும் போலிச் சமாதானங்களும்.

பிரபாகரனையும் புலிகள் இயக்கத்தையும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியது போன்றே இன்று ஜனநாயக அரசியல் பேசும் அனைத்து தமிழரும் பயங்கர வாதிகளாக பெயரிட்டு பயங்கரவாத தடைச் சட்டம் அல்லது அது போன்ற பாரிய மனித உரிமை மீறல்களை நியாயப் படுத்தும் சட்டங்களை இயற்றி இராணுவ ஆட்சிக்கு நிகரான அடக்கு முறைக்குள் நல்லாட்சி இலங்கையில் நடக்கிறது. இத்தகைய ஆட்சியை உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு காந்தீய தேசம் எனக் கூறிக் கொள்ளும் இந்தியாவின் பல மாநிலங்களிலும் நடக்கிறது. இன்னும் ஒரு படி மேலாகப் போய் அங்கே அவை தடையின்றித் தொடர வேண்டும் என்பதற்காகவே இந்தியா ஈழத்தின் தமிழ் இனப் படுகொலையை நடத்தியதோடு தொடர்ந்தும் நடத்த சிங்கள அரசுக்கு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.

இந்தியா மட்டும் அல்லாமல் ஐ.நா.மனித உரிமை ஆணையர் சவுதி இளவரசர் சையத் பின் ராயத் அவர்களும் இலங்கையின் புலிப் போராளிகளை போர்க் கைதிகளாக குறிப்பிடாது பாதுகாப்பு தடையில் உள்ளவர்கள் எனக் குறிப்பிட்டு மிகப் பெரிய கொடுமையை ஐ.நா.வின். நீல நிற ஆடை அணிந்த ஸ்ரீலங்கா அரசின் ஓநாயாகச் செயற்படுகிறார் என சர்வ தேச சட்ட நிபுணர் பிரான்ஸிஸ் போயில் கூறுகிறார்.

அமெரிக்காவின் இலினோயிஸ் மாகாண சட்டக் கல்லூரியில் சட்டத்துறைப் பேராசிரியரான மேலும் கூறுகையில் 1949ம் ஆண்டின் 3வது ஜெனிவா பிரகடனத்தின் 116 வது விதியின் படி மோதல்கள் நிறுத்தப் பட்ட பின்னர் போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு அவரவர் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனக் கண்டிப்பாக கூறுகிறது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் நிறுத்தப்பட்டு 2009 ஜூன் 1ந் திகதிக்குப் பின்னர் எந்த ஒரு மோதலும் இடம் பெறவில்லை. ஆனால் இலங்கை அரசு புலிக் கைதிகளை தொடர்ந்தும் 118வது விதியை மீறி தடுத்து வைத்திருக்கிறது. அவர்களைத் தடுப்புக் கைதிகள் எனக் குறிப்பிடுவதன் மூலம் சையத் ஈழத் தமிழருக்கு எதிரான இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கு உடந்தையாகவும் ஊக்குவிப்பவராவும் செற்படுகிறார்.

இந்த அளவுக்கு ஐ.நா. ஆணையாளரையே கண்டித்து கடுமையான விமர்சனம் வைக்கும் அளவுக்கு சர்வ தேச அறிஞர் மத்தியில் குரல்கள் பல இப்பொழுது படிப்படியாக அதிகரித்து வரும் சூழ்நிலைகளை சிங்கள அரசின் செயற்பாடுகளே ஏற்படுத்தி வருகின்றன. சிங்களத்தின் போக்கு மீண்டும் கடும் இனவாத வழியை பின்பற்றுவதையே இன்றைய நல்லாட்சியிலும் காண முடிகிறது. இது தான் மகிந்தரின் வழியாகவும் இருந்தது அதுதான் மைத்திரி ரணிலின் வழியாகவும் உள்ளது என்பதை வெளி உலகம் விரைவில் ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்படும். அப்போது தான் சில சர்வ தேச அரசுகளாவது தாம் செய்த தவறுகளை உணர்ந்து திருத்திக் கொள்ள நிர்பந்தப் படுத்தப்படும அது வரைக்கும் நாம் நமது இலட்சியத்தில் ஒரு சிறிதும் தளர்ந்து போகாமல் சிங்களத்தை விடவும் கூடுதலான கடும் போக்கை கடைப்பிடித்து எமது உரிமைகள் விடயத்தில் உறுதியாக இருக்க வேண்டும்.

2009 மே மாத காலப் பகுதியில் சனல் 4 கலம் மக்ரேயைத் தவிர வெளிநாட்டுப் பிரமுகர்கள் யாரும் எம்மக்களுக்கு நடந்த கொடுமைகள் பற்றிப் பேசவே இல்லை எனும்படிக்கு வெகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரே இருந்தனர். தமிழகத்தில் எமக்கான அனுதாபம் தலை தூக்கிவிடாமல் அன்றைய முதலமைச்சர் உலகத் தமிழரின் தலைவர் என்ற பெருமையோடு திகழ்ந்த கருணாநிதியே அரச யந்திரங்ளை முடுக்கி விட்டு மக்களின் ஈழத் தமிழர் ஆதரவு ஆர்ப்பாட்டங்களை தடுத்தார்.

இன்றோ அதே தமிழகச் சட்டசபையால் எமக்கு ஆதரவான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதோடு எமது வடமாகாண சபையையும் தீர்மானங்களை நிறைவேற்றி ஐ.நா. சபைத் தலைவரின் கவனத்துக்கு கொண்டு செல்லப் பட்டுவிட்டது. இவைகளால் இதுவரை எதுவித பயனும் ஏற்படாது இருக்கலாம்: ஆனால் வரலாற்றில் மறைக்கப்பட முடியாதவாறு எமக்கு இழைக்கப் பட்ட கொடுகைள் இனப் படு கொலையாக ஆவணப் படுத்தப் பட்டு விட்டது. 1917ல் முதலாம் உலகப் போரில் படு கொலை செய்யப்பட்ட ஆர்மேனியர் கொலையும் ஒரு இனப் படுகொலைதான் எனப் பிரான்ஸ் தேசம் ஏற்க 100 வருடங்கள் தேவைப் பட்டது. இந்தியாவில் சென்ற நூற்றாண்டில் ஜாலியன் வாலா பூங்காவில் பிரித்தானியப் படைகள் செய்த படு கொலைகளுக்கு பிரித்தானிய அரசு பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என சீக்கிய அமைப்பு வற்புறுத்தி வருகிறது. எனவே எமது போராட்டமும் ஒருநாள் வெற்றி பெற்றே தீரும்.

நல்வாய்ப்பாக இப்பொழுதுதான் எமக்கு ஒரு நேர்மையான மகான் வடமாகாணத்தின் முதல்வராக பதவி பெற்று மக்களின் உண்மையான தலைவராக செயற்பட்டு வருகிறார். அவர் மட்டும் இல்லையென்றால் எங்கள் அரசியல் தலைவர்கள் அனைத்தையும் படுகுழியில் மண்போட்டு மூடி விட்டிருப்பர். அண்மையில் அவரைச் சந்தித்த சுவீடன் நாட்டு வெளி உறவு அமைச்சர் மார்கொட் வோல்ட்ஸ்ரோம் அம்மையார் எமது சமஷ்டி ஆட்சித் தீர்வை ஆதரித்துப் பேசியதாக செய்தி வந்துள்ளது. இச்செய்தி எமது அரசியல் கோரிக்கையின் நியாயத் தன்மையை உலகம் ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகிவிட்டதைக் காட்டுகிறது.

எனவே சிங்களம் ஏற்காத இத்தீர்வுக்கு மாற்றாக தனித் தமிழ் தேசத்தை கோரும் உரிமை உறுதிப்படும். எனவே எமது போராட்டமும் தேடலும் தொடர வேண்டிய கட்டாயம் உள்ளது.

(தேடல் தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி அழுகிறது...

கிளிநொச்சிக்குப் போவதெல்லாம்
அந்நாட்களில் எமக்கு
அமெரிக்காவிற்குப் பயணப்படுதல் போன்றது.

பரந்தன் சந்தி கடந்ததும் வரும்
பக்கவாட்டு வயல்களின் வாசம்
ஆம்ஸ்ரடாம் பூக்களுக்கு நிகரானது.

கனிட்ட வித்தியாலத்தடியில்
கரையும் காகங்களின் சத்தமே
எமக்கான வரவேற்புப் பாடல்.

அன்றைய காமதேனுவிலும்,
அதன் பின்வந்த பாண்டியனிலும்,
உண்டு களிக்கவில்லையாயின்;
பாரிஸ் போயிருந்தும் ஈபிள்கோபுரம்
காணாமல் வந்தவன்போல்
கணிப்பர் நண்பர்கள்.

கருப்பட்டியோ, சர்க்கரையோ
கந்தன் களஞ்சியத்தில் வாங்குவதே
குடும்பத்துக்குப் பெருமை.

கூரையோடுகள் கலைந்துகிடப்பினும்
கண்டி வீதி ஒக்ஸ்போர்ட் எனலாம்
மகாவித்தியாலயத்தை...,

அண்ணாந்து பார்த்துப் பெருமையடையும்
ஐம்பத்தைந்தாம் கட்டை கோபுரம்,
ஊரிலிருந்த என்வயதினருக்கு - அன்றெல்லாம்
உலக அதிசயம்...

பின்புறச் சந்தையூடு செல்லும்
புகையிரதத் தண்டவாளங்களில் நடந்தால்
கொழும்பு போகமுடியுமா... என்ற
குறுக்குக் கேள்விக்கு
குட்டு வாங்கியது இன்னும் நினைவு.



தண்ணீர்த்தாங்கியைப் பார்த்து;
மழைக்காளானின் மட்டற்ற வளர்ச்சியோவென
மனதுக்குள் நினைத்து நினைக்க
இப்போது சிரிப்பு.

பச்சை வரிகீறிய
கறுப்புக்கண்ணாடி ஊர்திகள்
கடந்து செல்லும்போதெல்லாம்
கம்பீரமாய் நிமிர்ந்துநிற்கும் உள்ளம்.
இப்போதெல்லாம்;
அதை நினைத்தாலே கண்களில் வெள்ளம்.

இப்போதெல்லாம் யாரும்
எம்மளவிற்கு இரசிப்பதில்லையாம்.
கிளிநொச்சியை .....
மனிதருக்கு அந்தளவிற்கு
மனநிலையும் இல்லையாம்.

மின்சாரம் வந்து
மிளிரும் குமிழ்களால் ,
இப்போது
மினுமினுக்கிறதாம் கிளிநொச்சி.

ஆனாலும்;
அன்றைய குப்பிவிளக்குத் தந்த
ஒளி போலில்லையாம் ...!!!

- தேவன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி இலக்கத்தில் தமிழ் வானொலி

## Radio-by-Phone

www.etr.fm

ETR

- 0221 988 8014
- 01 8014 0659
- 044 513 3032
- 0787 72527
- 0330 332 6349
- 647 496 9717
- 02 8072 5194



## தமிழர் அரங்கம் கல்விக் கூடத்தின்

# தமிழ் மொழி வகுப்புக்கள்

தமிழ் மொழியை

– பேசுவதற்கு – வாசிப்பதற்கு – எழுதுவதற்கு –

சிறப்புப் பயிற்சிகளை வழங்குகின்றோம். தமிழ் மொழியை குறிப்பிட்ட காலத்திற்கு இலவசமாக, கட்டணம் இன்றி கற்பிக்கின்றோம். எமது மூன்றாம் தலைமுறையினரை தமிழ் மொழியை சரியாக பேசவும், வாசிக்கவும், எழுதவும் வைப்பதே எமது நோக்கம்.

- யேர்மனியின் கல்விமுறைக்கு ஏற்ற வகையில் எமது பாடத் திட்டம் அமைந்திருக்கும்.
- யேர்மன் மொழி, தமிழ் மொழி ஆகிய இரண்டிலும் ஆற்றல் மிக்க ஆசிரியர்களால் தமிழ் மொழி கற்பிக்கப்படும்.
- எமது தமிழ் மொழி வகுப்பில் இணைந்து கொள்வதற்கு வயது எல்லை கிடையாது.
- எத்தனை வயது என்றாலும், தமிழ் மொழியை கற்றுக் கொள்ள விரும்புபவர்களை ஆர்வத்துடன் வரவேற்கின்றோம்.

அத்துடன் யேர்மன் மற்றும் தமிழ் மொழி இரண்டிலும் வல்லமை உள்ளவர்களையும் ஆசிரியப் பணி செய்வதற்கு அன்போடு வரவேற்கின்றோம்.

இடம் : தமிழர் அரங்கம்
Rheinische Str. 76-80 44137 Dortmund

காலம் : வெள்ளிக் கிழமைகளில் (15.30 மணி – 18.30 மணி வரை)

மேலும் விபரங்கள் : 0231 950 979 00 // 0151 633 633 33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம் திறக்கும் உண்மைகள்...



### பாசம் வேசம்...

அன்பு என அலட்டிக்கொண்டு,
ஆசை வார்த்தை கூறி
அலுவல் முடிந்ததும் கழட்டி விடுவர்
ஆனாலும் பாசம் என வேசம் போடுவர்

கெங்கா ஸ்ரான்லி

### சாதனை உருவாக்கு

பயிற்சி செய்
பயிற்சி செய்
வலி வரட்டும்
வியர்வை வரட்டும்
உற்சாகம் கிடைக்கும்
சந்தோஷம் கிடைக்கும்
உன் உடல்
இனி இரும்பு போல்

சேயோன்



### பணமும் பசியும்

பணத்திற்காக அலையும்
பணக்காரன் இங்கே
பசியுடன் ஏங்கும்
பாமரர் அங்கே !
விதி விளையாடும்
இவர் வாழ்வு வேதனையே !

கெங்கா ஸ்ரான்லி



### உன்கையில்....


விளக்கு ஒளிதரும்,
ஆனால்;
நீதான் தீபமேற்றவேண்டும்



### புதுப் போர்!

வடக்கிலும் கிழக்கிலும்
விவசாயம் மீன் பிடி சுய
நெசவுத் தொழில் போய்
அந்நிய தைத்த ஆடை
ஆலை அடிமைகள் இப்போ!

பாக்கியம்



### தடயம்...

தமிழர் வீரத்தின்
தடயமாம் முள்ளிவாய்க்கால்,
அழித்தேவிட்டோமென்று
அவர்கள் சொல்கிறார்கள்

“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள்கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள்.

AKARAM - PO BOX 4153, 59037 Hamm - Germany - eMail: editor@akram.eu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கனவானது



கமழும் புலமும்
கனவாகிப் போய்
கையேந்தி வாழும்
இனமானோம் நாம்!


கருமி



### தேவை?

இவர்களின் கைதும்
விசாரணையும் சிறையும்
இன்றைய சிங்களத்தின்
நல்லாட்சி உயிர் வாழ!

ஞானி



### புலிப் புதையல்?

கேப்பா புலவில்
புலிகளின் மக்கள்
வங்கி நகைப்
புதையலாம?
புதைந்த கிணறைத்
தேடுகிறார் மாவீரர்
கல்லறை ?

ஐயப்பன்



### விஞ்ஞானம்

இருப்பதை விட்டுவிட்டு
இல்லாததைத் தேடுவதுதான்
மனிதம்,
அழகான பூமியை கைவிட்டு
அடுத்த கோள்களில்
ஆராய்ச்சி...



### எங்கே மனிதம்

மரிக்கும்போது
மனிதன் என்கிறார்கள்,
வாழும்போது இந்தச்சொல்
வாயில் வருவதேயில்லை.



### கூட்டணி

வாழ்விப்பதை விடவும்
அழிப்பதற்குத் தான்
அதிகமோ கூட்டணி,
ஆனந்தமும், தேவானந்தமும்
அத்திவாரமிடுதல் ஏன்..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோட்மூண்ட் மாநகரில்

# AMMA's food

Sri Lankan & South Indian Specialities

**உங்கள் விருப்பம்போல் நாவுக்கு சுவையாகவும், மனதுக்கு மகிழ்வாகவும் அனைத்து விதமான இலங்கை, இந்திய உணவுவகைகளை சூடாக அமர்ந்து உண்ணவும், இல்லத்திற்கு எடுத்துச் செல்வும்...**





# அம்மா'ஸ் உணவகம்

காலை 11.00 முதல் மாலை 11.00

செவ்வாய் கிழமை விடுமுறைதினம்

**உங்கள் இல்ல வைபவங்களுக்கும் உணவு தயாரித்துப் பரிமாறக் காத்திருக்கின்றோம்!**

சு
த்தம்
காதாரம்
வை

AMMA's food




**Rheinische Str. 80, 44137 Dortmund**

**Tel.: 0231-33898691 | Fax: 0231-33898693**

**Web: www. ammas-food.de | Mail: info@ammas-food.de**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாகம் - 2

# அலையில் கரையும் முகவரிகள்...

(யேர்மனியைச் சேர்ந்த சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு - பிரேமன் என்ற செயற்பாட்டுக்குழுவின் அங்கத்தவர்கள் கடந்த மாதம், இந்தோனேசியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழீழ ஏதிலிகளின் முகாமிற்குச் சென்று பார்வையிட்டதன் பின்னர் தெரிவித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்ட கட்டுரை இது.)

அவுஸ்ரேலியத் தீர்வானது ஐரோப்பாவிலே இயந்திரத்தனமாக பிரதி செய்யப்படாது, செய்யப்படவும் முடியாது. சூழ்நிலைகள் வேறுபட்டவை என்பதாலேயே அபப்டிச் செய்ய முடியாது. போர்களிலிருந்தும் அட்டூழியங்களிலிருந்தும் தப்பியோடும் வேறு வழியற்ற மக்கள் மீது நடுக்கடலில்வைத்துக் கட்டாயப்படுத்தும் வகைவலுவைப் பயன்படுத்துவதன் நியாயப்படுத்தலே ஐரோப்பாவுக்குஅனுப்பிவைக்கப்படும். .அதாவது ஒருபாதுகாப்பான இடத்தைஎட்டுவதிலிருந்து அவர்களை தடுக்க வலுவைப் பயன்படுத்துதலே அதுவாகும்.

மனித நேய விழுமியங்கள் மற்றும் முற்போக்கு அரசியல் முதலியவற்றைக் கொண்டாடும் ஒரு நாடு என்ற சுய கருத்துருவைப் பெற்றிருக்கும் நியூசிலாந்திலே தற்போது அவுஸ்ரேலியாவிலே ஏதிலிகள் நடத்தப்படும் விதமானது ஒருமட்டத்திலான கடுமையான வெறுப்புடன் நோக்கப்படுகிறது. நிச்சயமாகவே நியூசிலாந்து ஆனது, அது உள்ளெடுக்கும் ஏதிலிகளைத் தனது சமூகங்களோடு ஒருங்கிணைக்கும் வரலாற்றைக் கொண்டிருக்கிறது. ஆனால் ஏதிலிகள் தங்கள் நாட்டிற்கு வருவதை தடுப்பது தொடர்பாகவும் அவுஸ்ரேலியாவோடு அது உடன்பாடு செய்து கொண்டிருக்கிறது என்பதிலும் ஒரு சந்தேகமுமில்லை. அண்டிக்கா ஏதிலிகளின் விவகாரமானது நியூசிலாந்தின் சுய-கருத்துருவை, அந்த நாட்டுடைய நாட்டுநலனை முன்வகிக்கும் இயல்புடன் முரண்பாட்டுக்கு உள்ளாகிவிட்டிருக்கிறது. நியூசிலாந்தானது அவுஸ்ரேலியாவால் கட்டுப்படுத்தப்படும் பசுபிக்தீவு என்ற கட்டளை வடிவப்பாட்டுக்குள்ளே செயல்முனைப்பற்று இருந்துவிடுமா அல்லது தீரமானதும் செயல் விளைவானதுமான நிலைப்பாட்டை எடுக்குமா?

நியூசிலாந்தின் அடிப்படைப் பொறுப்பாக, அது கையெழுத்திட்டிருக்கும் ஐநா. உடன்பாட்டை மதிப்பது அமைந்திருக்கிறது. அப்படி மதிப்பதானது நியூசிலாந்தில் அடைக்கலம் கோருபவர்களை ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் கடப்பாட்டை அவர்களுக்குக் கொடுத்துவிடும். மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் தூதுவராலயத்தினால் வழங்கப்படும் பங்கீட்டு எண்ணிக்கையிலான ஏதிலிகளை ஏற்றுக் கொள்வதானது, நியூசிலாந்தை இந்த அடிப்படை பொறுப்பிலிருந்து விதிவிலக்களித்துவிடாது. அண்டிக்காவை அவுஸ்திரேலியர்கள் மே 22ம் திகதிதான் முதன்முதலில் இடைமறித்தார்கள் என்றில்லை. அதற்கு 5 நாட்கள் முன்னதாக் அதாவது மே 17ம் திகதி 65 ஏதிலிகளை சுமந்து கொண்டிருந்த அந்தப் படகு நியூசிலாந்துக்குச் செல்கிறது என்பதை உணர்ந்த அவர்கள் திரும்பிச் செல்லும்படி கேட்டுக் கொண்டதோடு, அவுஸ்ரேலியா கடற்பரப்புக்குள் பிரவேசிக்க வேண்டாம் என்றும் எச்சரித்திருந்தார்கள். 2015 மே மாதம் 17க்கும் 22க்குமிடையே பின்தள்ளி விடுவதுபற்றி கலந்துரையாடுவதற்கென நியூசிலாந்து அவுஸ்ரேலியாவுடன் தொடர்பு கொண்டிருந்தது என்பதைச் சூழ்நிலை சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.

எப்படியாக இருந்தாலும் நியூசிலாந்துக்கு வரும் ஏதிலிகளைத் தடுக்கும் உரிமையை அவுஸ்ரேலியாவுக்கு வழங்கும் உடன்படிக்கை ஒன்று நியூசிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நாடுகளுக்குமிடையேயான தொடர்பாடலானது நியூசிலாந்து தனது பொறுப்பிலிருந்து நழுவப்பார்ப்பதை அவுஸ்திரேலியா புரிந்தகுற்றத்துக்கு உடந்தையாக இருந்ததாகஆக்கி விடுகிறது. இவ்வாறான உடன்பாடொன்று இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன ஏதிலிகளின் உயிர்களை ஆபத்துக்கு உட்படுத்தியதன் மூலம் அவுஸ்திரேலியா குற்றமொன்றைப் புரிந்திருப்பது மட்டுமல்லாமல் அப்படிச் செய்வதின் மூலம் நியூசிலாந்திடம் அடைக்கலம்கோருவதற்கு ஏதிலிகளுக்குள்ள உரிமையை அப்படி யாசிக்கமுடியாமல் அவர்களைத் தடுத்திருப்பதனாலும் ஒரு குற்றத்தையும் புரிந்திருக்கிறது. ஐ.நா உடன்பாட்டின்படி அட்டூழியங்களுக்குத் தப்பியோடும் ஒரு ஏதிலி மீது அவர் விரும்பும் நாடு ஒன்றுக்கு வந்துசேர்வதற்கு அவர்பயணப்படுத்திய வழிக்காக வழக்குத் தொடரமுடியாது. எப்படிப் பார்த்தாலும் இந்த ஏதிலிகள் குழுவை ஏற்பதற்கு நியூசிலாந்து கடமைப்பட்டிருக்கிறது.

இது நேரத்துக்கு எதிரான பந்தயம் எனச் சொல்லிக்கொள்ளலாம். குப்பாங்கிலிருக்கும் அண்டிக்கா ஏதிலிகளின் மீதான அழுத்தம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் முன்பு அனுபவித்து வந்த வணக்க தலங்களுக்குச் செல்லுதல் போன்ற ஆகக்குறைந்த உரிமைகள் கூடத் தற்போது குறைக்கப்பட்டிருக்கின்றன. எமது அணியினரால் நேர்காணப்பட்ட தமிழ்பெண்களில் ஒருவர் இப்போது நோயுற்று கடுமையான வேதனையிலிருக்கிறார். ஆனால் அவர் ஒரு மருத்துவரிடம் செல்வதிலிருந்தும் தடுக்கப்பட்டிருக்கிறார். இந்தக் குழுவில் இருக்கும் எல்லோரையும் அவர்கள் எந்த நாட்டில் இருந்து தப்பியோடிவந்தார்களோ அந்தநாடுகளைநோக்கிப் பின்தள்ளுவது அவுஸ்திரேலியாவுக்கு முக்கியமானது. இந்த பெறுபேறைப் பெறும் விதத்தில் சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றன. 9 மாதங்களாக இருண்ட, நம்பிக்கை தராத சூழ்நிலைகளில் வாழ்ந்ததன் தாக்கங்கள் ஏற்கனவே ஏற்படத்தொடங்கிவிட்டன. மொத்தம் 65 பேரில் 22பேர் இங்குள்ள நிலைமைகளைத் தாங்க முடியாமல் சர்வதேசப் புலம் பெயர்வுக்கான அமைப்பு வழங்கிய விமான அனுமதிச் சீட்டுகள், ஒருதொகுதி உடுப்புகள் மற்றும் பயணப் பைகளுடன் சிறிலங்காவுக்கே திரும்பிச் சென்று விட்டார்கள்.

முகாம்களில் நிலவும் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமாக, தாங்கள் எந்த ஆட்சியிடமிருந்து தப்பி வந்தார்களோ அந்த ஆட்சியை எதிர்கொண்டு வாழ்வதற்கு தங்களுக்கு இருக்கக்கூடிய வாய்ப்புகளைப் பரிசீலிக்கத் திரும்பும் விருப்பத் தெரிவைக் கருத்திலெடுக்கும் நிலைமை கூடவரலாம். நாங்கள் இதை எழுதும் போதே இங்கே அடைபட்டிருக்கும் ஏதிலிகளை சந்திக்கச் செல்ல சிறிலங்கா அதிகாரிகள் திட்மிடுவதாக நாங்கள் கேள்விப்பட்டோம். அவர்கள் சி றிலங்காவில் பாதுகாப்பாக இருக்கலாம் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதிலிகளுக்குக் கூறத்தான் அவர்கள் செல்கிறார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஏதிலிகளை எட்டுவதற்கு எங்கள் அணிகளுக்கு அனுமதி மறுத்த அதே அதிகாரிகள் (நாங்கள் எடுத்த காட்சிகளை இரகசியமாகவே படம் பிடிக்க வேண்டியிருந்தது.) (TVNZ TV3) ஏதிலிகளுக்கு திகிலூட்டவென அவுஸ்திரேலியா பொலிசாருக்கும் சிறிலங்கா அதிகாரிகளுக்கும் வரையறையற்ற எட்டுதல்களை வழங்கியிருக்கின்றனர்.

அடுத்த சில வாரங்கள் மற்றும் மாதங்களில் நியூசிலாந்தும் சர்வதேசமும் மேற்கொள்ளும் செயற்பாடுகள் மு டி வே ற் ப டு த் து ப வை ய ா க இருக்கும். அண்டிக்காவில் இருந்தவர்களில் எஞ்சியிருக்கும் ஏதிலிகளை நியூசிலாந்து திரும்பிப் புகலிடம் கோர அனுமதிப்பதானது, அ வு ஸ் தி ரே லி ய ா வி ன் தலையீடு இல்லாமல் இருந்திருந்தால் இயற்கையாகவே நடைபெற்றிருக்கும் என்பதோடு, இந்த வேதனைக்குட்படுத்தப்பட்ட ஆத்துமாக்களை, எண்ணைச்சட்டிக்குள் இருந்து நெருப்புக்குள் பாய்வதிலிருந்து காப்பாற்றியிருக்கும். நியூசீலாந்திலிருக்கும் முற்போக்கு சிந்தனை கொண்டோர் 2001ம் ஆண்டின் ரம்பா சம்பவத்தின் (Tampa incident) போதான மனப்போக்குடன் இப்போதும் செயற்படும்படி தங்கள் மனவலிமையற்ற அரசின் மீது அழுத்தத்தை பிரயோகிக்க முடியும். அவுஸ்திரேலியா மாதிரியானது ஐரோப்பாவினுடைய வலது சாரி அரசியல் வாதிகளுக்கு அகத்தூண்டுதலளிக்கும் காலப் பகுதியொன்றில் ரம்பா சம்பவம் இடம்பெறவில்லை. ஆனால் அண்டிக்கா சம்பவம்அப்படியானதுதான்.

தொடரும்...


NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE

Catering & Partyservice Mobil 0173-7424955


நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா? உதாரணமாக பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளை? அப்படியானால் நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்.

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா? எவ்வித சிரமமும் இன்றி! எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.

Like

மேலதிக சேவை ஏற்பாடுகள்

- திருமணமேடை, மண்டபம்– மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள்



- நிழல்படம் மற்றும் வீடியோ



- விநியோகம் ∴ பரிமாறும்




NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE

Nandy's Catering
Düsseldorferstr. 52a
40667 Meerbusch
0173/7424955

NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE

Printed By Vijithan, Düsseldor


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்மடி

சு.கருணாநிதி

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு குறிகாட்டுவான் நோக்கிச்செல்லும் இ.போ.ச. பேரூந்தில் நானும் அம்மாவும் ஏறிக்கொண்டோம். இருப்பதற்கு இருக்கை கிடைக்கவில்லை மல்க்கம்பியில்ப்பிடித்துக்கொண்டு நின்றோம். வயதான அம்மாவிற்கு மனிதாபிமானமுள்ளவர்கள் யாராவது எழுந்து இடம் தருவார்களென்ற எதிர்பார்ப்புடன் இருந்தவர் முகங்களை பச்சாதாபத்தோடு பார்த்தேன், எல்லாமுகங்களும் மரணவீட்டில் நிற்ப்பவர்களது முகமாக இறுகி வெறிச்சோடி, பாசாங்கும் நடிப்புமாகக் கிடந்தது.

தீவுப்பகுதிகளுக்கு அனுப்பப்படும் உணவுப்பொருள்களைப் போல இலங்கையில் சேவையிலிருந்த ஒதுக்கப்பட்ட பழைய பேரூந்துகள் தான் தீவுப்பகுதி போக்குவரத்துப்பாவனையிலிருக்கும். அப்படியான ஒரு பழைய பஸ் தான் எமக்கும் பயணிக்கக் கிடைத்தது, இருக்கிறத்துக்கு சீற்றும் இல்ல இவ்வளவு தூரத்துக்கு நிண்டுண்டு போக ஏலுமா ? சொன்னத்தக்கேட்டியா நான் சொல்லுறத எப்பதான் கேக்கிறனி. வெளிநாட்டில இருந்து வந்து பஸ்சில திரியிற, பாக்கிறசனம் என்ன நினைக்குங்கள். மதிக்குங்களா .? அம்மா வழமைபோல என்னை நச்சரித்தா.

பாக்கிறசனம் என்று நாம் மற்றவர்களின் மதிப்பீடுகளுக்காககவும் பம்மாத்துக்களாகவும் நமது சுயத்தையும் நலனையும் விட்டுக்கொடுத்து சிலவேளைகளில் இழந்தும் ,நம்மைக்கெடுத்து கொண்டும், வருத்திக் கொண்டுமிருக்கின்றோம், அவர் என்ன நினைப்பார் ? இவர் என்ன நினைப்பார், என மாயைத்திரைகளுக்குள் நம்மைப்பற்றி கற்பனாவாத பிரமைகளை பார்ப்பவர் கொண்டிருக்க வேண்டுமென்பதற்க்காக மறைந்துகொண்டு, நமது வாழ்வு நமக்கானது என்பதைவிடுத்து பொய்யான அர்த்தங்களை புனைந்துகொண்டிருக்கின்றோம்,

அம்மா ஆட்டோவில்ப்போவோம் என்றா நான் பஸ்சில்ப்பயணம் செய்துபார்க்க ஆசையாக இருக்கென்று பஸ்சில்ப்போவோமென்றேன். பஸ் குலுக்கிற குலுக்கல்ல குடல் குலுங்கி சத்திவரும், எனக்கேலாதடா. அப்ப அம்மா நீங்கள் ஆட்டோவில வாங்க நான் பஸ்சில வாறன். சின்னனில இருந்தமாதிரி விடாக்கொண்டனா இருக்கிற இன்னும் திருந்த இல்லை.

உன்ன என்னண்டு தனியவிடுறது.. சரி உன்ர ஆசைக்கு போகேக்க பஸ்சில போவம் வரேக்க ஆட்டோவில வருவம். நான் உடன்பட்டேன். அம்மாவைச்சிரமப்படுத்துகிறேனென்றவருத்தமும் உள்ளூர. அய்ரோப்பாவில் சொகுசு வண்டிகளில் பயணம் செய்து வெறுப்பேறி இந்தபழைய லொட லொடவென்ற பஸ்சில் குன்றும் குழியுமான கிரவல் ரோட்டில் பயணிப்பது என்பது எனக்கு அலாதியானதும் ஆனந்தமானதாகவுமிருக்கிறது. இந்த ஆனந்த ரசிப்பை அம்மாவுக்கு சொன்னால் புரியாது. புகலிடத்திலிருந்து இங்கு வருபவர்களின் தாகங்கள் தாக்கங்களை இங்கிருப்பவர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியவைப்பது இலகுவல்ல..

சேட் தெறியப்பூட்டு காவாலியள் மாதிரி திறந்து விட்டுட்டு வாற வெக்கையில் உடம்பு வியர்த்துக்கொண்டிருந்தது அம்மாவின் விருப்பப்படியே திறந்து விட்டிருந்த சேட் டின் மேல்த்தெறிகளைப்பூட்டினேன்.

ரெண்டுநாளில கறுத்துக் காய்ஞ்சு பார் கோலத்த அம்மாவின் கவனமும் கரிச னையும் என் மேலே குவிந்திருந்தது. அரச னானாலும் தாய்க்குப்பிள்ளைதானே என்ற முதுமொழிக்கிணங்க, தாயன்பு மாறாதிருந்தது.

புகலிடங்களிலிருந்து தாயகம் போவபர்கள் அங்கிருப்பவர்களுக்கு பிரமாண்டமாக படம் காட்டி பம்மாத்துக்காட்டி தாம் பிரபுக்கள் மாதிரியானவர்களாக அங்கிருப்பவர்களுக்கு பிரமை பூட்டுகிறார்கள் கவர்ச்சி காட்டுகிறார்கள் இந்தப் போலியான பொய்க்கூத்துகளைப் புரியாத பலர் நம்புகிறார்கள்,புரிந்த சிலர் வெறுத்துப் பரிகாசம் செய்கிறார்கள். அம்மாவிற்கு நான் இயல்பானவன் யதார்த்தவாதி என்று தெரிந்திருந்தும் பொய்களையும் போலிகளையும் தான் மக்கள் மதிக்குதுகள் ஊரோட ஒத்தோடு என்று எனக்கு உபதேசம் செய்துகொண்டேயிருப்பா.

உன்ரகுணம் ஒண்டும்மாற இல்லயடா மகனே எல்லாத்துக்கும் உண்ம நேரம்.. எண்டு இப்பிடிருந்தா உன்ன சந்தையில கொண்டுபோய் அரவிலைக்கு வித்துப்போடுவொங்கள் கவனம். அம்மாவின் கருத்தும் லாவகமும் எனக்குள் மகிழ்வைத்தந்தது.
வயதில்ப்பாதி புகலிடத்தில் கழிந்துபோனது அதற்கேற்ப்ப பல குணங்கள் மாறிவிட்டிருந்ததை அம்மாவால் கண்டுணர முடியாமல்; போனது ஞாயம் தான். அந்த மண்ணில் மிதித்ததும் அம்மாவின் அரவணைப்பிலும் எல்லாம் காணாமல்ப்போய்விட்ட அப்பாவியானேன். வாலிபனாக அனுப்பிவைத்த அம்மா, வாலிபப்பிள்ளைகளுக்கு அப்பாவான பின்னும் என்னை இன்னும் வாலிபனாகவே மனதிலிருத்திவைத்திருக்கின்றா. நானும் மனைவி பிள்ளைகளுடன் வந்திருந்தால் என்னுரிமையில் குறைந்த பங்குதான் அம்மாவுக்குச்சேர்ந்திருக்கும்.

ஒருநாள் காலுக்குச்செருபில்லாமல் தெருவிலிறங்கி நடந்தேன் சிச்சீகால்ல செருப்பப்போட்டுக்கொண்டு போடா கால்ல கல்லு,மண்குத்தும் பழக்கமில்லாதகால். அய்ரோப்பாவில அதிகநேரம் சொக்சுக்குள்ளேயும் சூவுக்குள்ளேயும் கிடந்து அவிஞ்சு நாறிய கால்கள் காற்றில்க்காயவிட்டு மண்ணில்நடக்க எவ்வளவு சுகமாயிருக்கிறது என்பதை அம்மாவுக்கு விளக்கம் சொல்லி சம்மதிக்க வைத்து தெருவிலிறங்கினேன். பாதங்கள் மண்ணில் முத்தமிட்டு உரசும்போது மனதில் ஒட்டியது, அக்கணம் கால்களுக்கும் மண்ணிற்குமான உரையாடலாக கற்பனை பண்ணினேன். கிடைத்தற்கரிய சுகானுபமாக உணர்ந்தேன்.கால்களோடு குறுணிக்கற்கள் பட்டிமன்றம் நடத்தின. மண்துகள்கள் கவிதை வாசி த்தன மண்ணின் கவிதை மனதால்ப்புரியமுடியாத புளகாங்கிதத்தொடுகையால் பூரித்தது. மண்மணம் உடலெங்கும் பரவி பரவசமூட்டியது. மணலை கால்களால் எத்தி அலைந்து, புழுதி புறங்காலில்ப்பட குழந்தைத்தனமாக நடந்தேன். மணல் ஒழுங்கையாலும் தார்வீதியாலும் வீதியுலா வந்து இருப்புக்கு வந்தேன்.

எங்க இவ்வளவு நேரத்துக்கு என்ன செய்தனி எட மகன இந்தச்சேட்டோடயா போய்வாற. கண்ட சனம் என்ன நினைச்சிருக்கும் இஞ்ச பொடியள் என்னடா வெண்டா சாரத்துக்கு ஒரு செருப்பு ரவுசருக்கு ஒரு செருப்பு ஈவினிங் கலர் மோணிங் கலர் எண்டு கலர் கலராச் சேட் போட் டுக்கொண்டும் திரியிறாங்கள் நீ வெறுங்காலோட ஒண்டுக்கும் வழி இல்லாதவன் மாதிரி களிச றமாதிரி திரிஞ்சிட்டுவாற.

அம்மாவின் நச்சரிப்பு எனக்கு தேவையாகவும் பிடித்தமானதாகவும் இருந்தது, பேருந்து புறப்பட்டது.

ஒரு நபரிடம் அம்மா அவரிருக்கையைக் கேட்டா அந்தநபர் கேளாதவர் போலும் பேசாதவர் போலும் கண்களை மூடித்தூங்குபவனாகவும் பாசாங்குடன் நடித்துக்கொண்டிருந்தார். இப்படி எத்தனை விதமான நடிப்பை அய்ரோப்பிய புகையிரத பஸ் பயணங்களில் பார்திருக்கின்றேன், அம்மா இப்பிடி இருங்க ஒருஇளைஞன் எழுந்து தன்னிருக்கையை தந்தான்.

ஹஹபோமஸ்துதி அவனது மொழியில் அவனுக்கு நன்றி சொன்னேன்.

என்மனம் வெல்லப்பட்டதா? ஆக்கிரமிக்கப்பட்டதா? என்பதை என்னால் தீர்மானிக்கமுடியாதிருந்தது. அம்மாவிற்கு இருக்கை கிடைத்ததும் என் மன அந்தரமும் கோபமும் அடங்கியது. பண்ணைச்சந்தியைக்கடந்து கடலினூடான பாதையில் வண்டி.பயணித்துக்கொண்டிருந்தது. கடல் நடுவே ஊடறுத்துப்போகும் வீதியில் வாகனங்களில் பயணித்தல் வேறெங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தற்கரிய சுகானுபவம். அதை ஒரு பாக்கியமாகவும் கருதுகிறேன்.
முன்பெல்லாம் பார்க்கப் பயமும் பரவசமுமூட்டிய ஆழ நீலக்கடல் வற்றி மெலிந்திருந்தது கடலையுமள்ளிக் கடனடைக்க விற்று விட்டார்களோ. கடல் பற்றி நான் எனக்குள் கட்டிவைத்திருந்த பிரமையை கடல்க்காட்சி களவாடியிருந்தது. ஆங்காங்கு சிலதோணிகள் சில கட்டுமரங்கள். நடந்தும் சிலர் வலைவீசிக்கொண்டிருந்தனர். மீன் பிடிக்காட்சிகள் மிகக்குறைவாகவே கண்களுக்குள் நின்றன. கடற்காகங்களும் கொக்குகளும் வேறு பெயர் மறந்துபோன பறவைகளும் குரலெழுப்பி பாடிப் பறந்து கொண்டிருந்தன. கடலும் அலையெழுப்பி ஆர்ப்பரிப்பில்லாமல் பயந்துபோய் அமைதியாகவேயிருந்தது.

மனம் எல்லாவற்றையும் மறந்து என்னையும் விட்டு ,பஸ்சை விட்டிறங்கி தன்னிச்சையாக நடந்துபோனது ஒரு இரசனையுடன்.

இந்த அபூர்வமான அழகான இரசனையான பயணங்களை அனுபவிக்க வென்றுதான தென்னிலங்கை மக்கள் தினமும் ஆயிக்கணக்காக வருகிறார்கள். இந்த இயற்கை வனப்பு எமக்கு கிடைத்த பொக்கிசம் என்பதை இப்போது உணர்கிறேன். வெய்யில் சுட்டெரித்தாலும் கடல் நீரைத்தொட்டு வீசுகின்ற காற்றின் வேகத்தால் குளுமையாகவும் மென்மையாகவும் குருதிச்சுற்றோட்டத்தை சமப்பத்திக்கொண்டிருந்தது. மனம் புத்துணர்ச்சியில் பிரவாகித்தது. கடல் வாசம் பசி தீர்த்துக்கொண்டிருந்தது. நான் என்னை மறந்து இலயித்துக்கொண்டிருந்தேன். கடலை வாசித்துக்கொண்டிருந்தேன் அதிலிருந்து கற்பதற்கு பல விடயங்களிருக்கின்றன.

மனம் கடலினுள் இறங்கி நடந்தது தோணியிலேறிப் பயணித்தது,வலை வீசிப்பார்த்தது நீந்தத்தெரியாததினால் நீரினுள் மூழ்கியெழுந்தது, உவர்நீர் உள்ளுணர்வுக்குள் இனித்தது. ஆகா மனம் பைத்தியமாகியது நான் புது உலகில் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தேன். மனம் செய்யும் காரியங்களைப்பார்த்து பாதிமனம் சிரித்தது. இதைத்தான் மெய்மறந்தநிலை என்று சொல்வார்களோ? அனுபவத்தில் உணர்கிறேன்.

புதிய பிரதேசங்கள் புதிய பிரவேசங்கள் புதிய அனுபவங்கள் புதுப்புதுக் காட்சிகள் புதுப்புது சூழல்கள் மனித மனங்களின் வளமாக்கிகள். எண்பத்தியோராமாண்டு எழுதிய ஒரு புதுக்கவிதை

லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக்கடை

ASI Boucherie
PARIS-FRANCE

வாடிக்கையாளர்கள் அதிகம் ஆனதால் தினமும் புதிய இறைச்சிகள்

தமிழ் வாசம் வீசும் ஐரோப்பிய இல்லங்களில் எல்லாம்
இப்பொழுது ஆசி, இறைச்சிக்கடையின் இறைச்சிக்கறி வாசமும்
ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்.
சுவையான இறைச்சி உண்பதற்காக, ஆசி இறைச்சிக்கடையில்
மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்!
அன்பான வரவேற்பு! தினமும் புதிய இறைச்சி வகைகளே விற்கப்படுகின்றது.
இது எப்படி சாத்தியமாகின்றது? தரமான இறைச்சியே விற்கப்படுவதால் வாடிக்கையாளர்களோ அதிகம்.

வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்
ஆடு முழுதாகவோ அல்லது அரையாகவோ
கிலோ 4,20€

தினமும் ஆட்டுப்பங்கு
195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்போ பொருத்தமாகவிருந்தது.

தாறுமாறாக கற்பனைகளும் கருத்துக்களும் சிந்தனையை கிளறிக்கொண்டிருந்தன. வீதி திருத்தவேலைகள் நடந்துகொண்டிருபதால் வண்டி இடையிடையே எதிர்திசையிலிருந்து வரும் வாகனங்களுக்கு இடம் விட்டு நின்றும்,நடந்தும் ஊர்ந்து கொண்டிருந்ததால் நான் அதிகம் கடலுடன் கட்டுண்டு சல்லாபிக்க அவகாசமிருந்தது.


சாரளத்தினோரத்தில் ஒரு இருக்கை கிடைத்திருந்தால் இன்னும்? மனம் பேராசைப்பட்டது.

மண்டைதீவுச் சந்தியைக் கடக்கையில் கண்ணாம் பற்றைகள் உவர்நீரில் வளரக் கற்றுக்கொண்டு பசுமையாகவிருந்தன. பல இனப்பறவைகளும்,குருவிகளும் இசைக்கச்சேரி நடாத்திக்கொண்டிருந்தன. இவ்விடத்தை பறவைகள்சரணாலயம்என்றுபிரகடனப்படுத்தியது பொருத்தமாகவேயிருக்கிறது. முன்பெல்லாம் ,துர்நாற்றத்துடனான அசூசையாகவிருந்த இந்தப் பிரதேசத்தை இப்போது இரசிக்கவிரும்பும் நிலைக்கு நான் மாறிவிட்டேன்.

மனம் மாறியிருக்கின்றது. காலம் மாற்றிவிட்டிருக்கின்றது. மனம் மாற்றங்களை, மகிழ்ச்சிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றது.

கொண்டுபோன கைக்கமராவால் கடலையும், செடிகளையும் பற்றைகளையும் படம்பிடித்தேன். வர்ணத்தில் எவ்வளவு அழகாக பிரமிப்பூட்டியது அந்தக்காலத்தில் எங்கள் கிராமத்தையும் வர்ணத்தில்ப் பிடித்திருந்தால் இதே அழகு இருந்திருக்கும் தான் எங்கள் அழகு இப்பதான் எங்களுக்கு புரிந்திருக்கின்றது எல்லாவற்றையும் ஒரு சேர அள்ளிப்பருகிக் கொண்டேன். இன்னுமொரு நாள் ஆட்டோபிடித்து வந்து ஆரா அமர இருந்து பார்க்க இரசிக்க வேண்டுமென எனக்குள் தீர்மான மெடுத்தேன்.

நான் கையில் வைத்திருந்த தண்ணீர்ப் போத்தல் பாக்கை ஹஹ இஞ்ச தாடா மகன நான் வைச்சிருக்கிறன் பாக்கை அம்மா கேட்க இல்லயம்மா நான் வைச்சிருக்கிறன் . உனக்குப்பாரம் தா நான் மடியில வச்சிருக்கிறன் அம்மா வாங்கி மடியில் வைத்திருந்தா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சீதாராமன்

# இந்தியன் - இந்தியா - இந்திய ஜனநாயகம்?

இந்திய இராணுவம் மணிப்பூர் மாநிலத்தில் நடத்தி வரும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தி பெண்கள் நடத்திய நிர்வாணப் போராட்டம்-நன்றி புதிய ஜனநாயகம் நவம்பர் 2010

இவை எல்லாம் என்ன வென்று யாருக்காவது புரிகிறதா? இப்படிப் புரியாத தலை சுத்தும் தத்துவங்கள் இந்திய அரசியலில் மலிந்து கிடக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தியா என அழைக்கப்படும் பாரத தேசம் முகவரைவு (Pre ample)உள்ளது. அங்குள்ள அரசியல் தலைவர்கள் சிலர் எப்படி ஒரு தேசத்துக்கு இரண்டு பெயர்கள் இருக்க முடியும் எனக் கேட்கிறார்கள்.

வரலாற்றில் இந்தியா என்று ஒரு நாடே இருந்தது கிடையாது. அப்படி முதலில் அழைக்க வைத்தவர்கள் வர்த்தகம் செய்ய வந்து தேசத்தை துண்டு துண்டாக வசப்படுத்திய பிரித்தானியர்களே. அவர்களும் கூட பாண்டிச் சேரியையும் கோவாவையும் தமது ஆளுகைக்குள் கொண்டிருக்க வில்லை. எனவே இந்தியா என்பதும் அதன்படி இந்தியன் என அழைப்பதும் ஏற்க முடியாத குழப்பங்கள்.

சரி. இந்தியாவின் முதல் பிரதமரும் அவருடைய வாரிசுகளான இன்றைய இந்தியக் காங்கிரஸ் தலைவர்களும் பாரத தேசத்தின் பூர்வ குடிகளா என்றால் அவர்களின் தாயகம் பாரசீகம். சோனியா காந்தி என்ற பெயரோடு மகாத்மா காந்தியின் ஒளிப் பிரகாசத்தில் மறைந்த இருப்பவரோ ஒரு இத்தாலியக் குடிமகள். இத்தாலிய தேசத்தின் சட்டப்படி இத்தாலிய வம்சாவழி எங்கிருந்தாலும் இத்தாலியர்தான்.

எனவே அவர் இந்தியாவின் பிரதமர் ஆக இருக்க முடியாது என்ற சட்டச் சிக்கலால் முந்தைய குடியரசுத் தலைவர் திரு.அப்துல் கலாம் மறுத்தார் ஆனால் அந்த ஏமாற்றத்தையும் காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்கள் பதவியை தியாகம் செய்தார் என புகழ் பாடி வருகின்றனர். தம்மைப் பச்சைத் தமிழர்கள் எனப் பேசிக் கொள்ளும் தமிழக அரசியல் வாதிகளால் அவர் அன்னை சோனியாவாக போற்றித் துதிக்கப் படுவதுதான் இந்தியாவும் இந்தியனும்.

இலஞ்சம் ஊழல் கறுப்புப் பணத்தை ஒழிப்பேன் எனப் பிரதமர் பதவிக்கு வந்த குஜராத்தின் முன்னாள் முதல்வர் நரேந்திர மோடியும் அவரது ஆட்சியும் பல ஊழல் மோசடிகளுக்குப் பதில் தேட முடியாமல் பாராளுமன்ற அமர்வுகளை தள்ளிப் போடும் அவஸ்தையில் தவிக்கிறது. இவர் பிரதமர் ஆனால் ஈழத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என முழுமையாக நம்பி முதலில் தமிழகத்தில் ஆதரவு தெரிவித்வர் மறு மலர்ச்சி திராவிடக் கழகப் பொதுச் செயலர் திரு வை.கோ. அவுரே முதலில் விட்டு விலகினார் காரணம் மோடியின் பதவி ஏற்பில் முக்கிய அழைப்பினராக மகிந்த ரர்பக்ஷவும் அவருக்கு வழங்கப்பட்ட செங்கம்பள வரவேற்பும் விருந்துபசாரங்களுமாகும்.

பா.ஜ.க. பதவிக்கு வந்தால் தமிழருக்கு விடியல் கிடைக்கும் எனப் புலம் பெயர் ஈழத் தமிழர் அமைப்பான பிரித்தானியாவில் தலைமையகமாக இயங்கும் உலகத் தமிழர் பேரவை அன்றைய எதிர்க்கட்சித் தலைவியும் இன்றைய வெளி உறவு அமைச்சருமான சுஸ்மா சுவாராஜ் பின்னால் அலைந்து புலம் பெயர் தமிழர் மத்தியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையை வளர்த்தனர். ஆனால் அவர் வெளி உறவு அமைச்சர் பதவியை ஏற்கும் முன்னரே மகிந்த ராஜபக்ஷவின் பக்தையாகி விட்டார் எனபது பின்னர்தான் தெரிய வந்தது.

பா.ஜ.க.வும் பிரதமர் மோடியும் தீவிர இந்துத்துவ மத அமைப்பான ராஷ்டிரிய ஜனதா தளத்தின் இந்துத்துவா கொள்கை பேசி மக்கள் பலம் பெற்று பெரும் பணமுதலாளிகளின் தேவைகளை நிறைவு செய்யும் முதலாளித்துவ சிந்தனையாளர் என்பது இப்பொழுது முழுமையாக வெளிப்பட்டு விட்டது. அவரது உயிர் நண்பர்களாக அம்பானிகளும் டாடாக்களும் மிட்டல்களும் உலகின் வளங்களை சுரண்டும் அரசியலை நடத்துகிறார்கள்.

பாராளுமன்றத் தேர்தலின் போது பிரபல ஊடகர் சிந்தனையாளர் எழுத்தாளர் எனப் பல சிறப்புகளைக் கொண்ட அருந்ததி ராய் கூறிய கருத்தை இங்கே நினைவு படுத்துவது அவசியமாகிறது. அதாவது முதலாளி வர்க்கம் தொடர்ந்தும் காங்கிரஸ் கட்சியைப் பயன்படுத்தி வளங்களை சுரண்ட முடியாது எனத் தெரிந்து விட்டதால் நரேந்திர மோடியை கொண்டு வருகிறது என்றார். நடந்து முடிந்த பாராளமன்றத் தேர்தல் வியூகங்களும் அதன் பிரமாண்டமான பிரச்சார உத்திகளும் செலவிடப்பட்ட தொகையும் இன்று நடப்பவையும் ராயின் கூற்றை அப்படியே மெய்ப்பிப்பதைக் காண்கிறோம்.

வடக்கிலே பல மாநிலங்களில் மலைவாசிகள் பூர்வ குடிகள் தமது நிலங்களில் இருந்து விட்டப்படுவதும் எதிர்பவர்களை பயங்கரவாதிகள் தீவிரவாதிகள் என சாட்டிக் கொள்வதும் இராணுவம் பொலிஸ் நடத்தும் அராஜகம் பாரிய மனித உரிமை மீறல்களின் கூடாரமாக மாறி விட்டது. இத்தகைய இராணுவத்தின் அத்து மீறல்களை மேலே உள்ள படம் சாட்சியாக உள்ளது. இன்னொரு சாட்சியாக மணிப்பூரில் கடந்த 16 ஆண்டுகளாக கொடூரமான இராணுவ சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி உண்ணா விரதம் இருந்து வருகிறார் இரோம் ஷர்மிளா என்ற இந்த இரும்புப் பெண்.



போதெல்லாம் காவல்துறை அவரைத் தற்கொலை முயற்சி என்ற சட்டத்தில் வழக்குத் தொடுத்து சி றையில் வைக்கப்படுகிறார். விடுதலை ஆனதும் உண்ணாவிரதம் இருந்து மீண்டும் சிறை செல்லும் இவரது இத்தகைய சாதனை 16 ஆண்டுகளைக் கண்டும் நிற்காது தொடர்கிறது.

இப்படியான மைய அரசின் ஆட்சியில் தமிழ் மாநில அரசின் பல முக்கிய பிரச்சனைகள் தீர்க்கப்படாது இருக்கின்றன. அவை அத்தனையும் தமிழர்க்கு விரோதமான நிலைப் பாட்டினையே வெளிப் படுத்துகின்றன. தமிழருக்கு முக்கிய அச்சு றுத்தலாக விளங்குவது தமிழக மீனவர்கள சிங்களக் கடற்படை சுட்டுக் கொல்வதும் சிறைப்படுத்தி வைப்பது, அவர்களின் படகுகளை எடுத்துக் கொள்வது என்பன கடந்த 2009 முதல் தங்கு தடை இன்றி தொடருகின்றன.

இலங்கை ஒரு குட்டித் தீவு இந்தியா பிராந்திய வல்லரசு எனுமளவுக்குப் பலம் வாய்ந்த நாடு. அதன் குடிமக்கள் தமிழ் மீனவர்கள் என்பதால் இந்த அளவுக்கு இலங்கையின் சிங்களக் கடற்படை இவ்வளவு வன்மத்தோடு நடந்தும் இந்தி அரசின் மெத்தனம் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. குறைந்த பட்சம் இந்தியக் கடலோர ரோந்துப் படை கடல் எல்லையைக் கணகாணித்து தனது மீனவர்களைப் பாதுகாக்க வேண்டாமா?

இதே வேளையில் இந்தியப் பெரு முதலாளிகளின் முதலீடுகளும் வணிக தொடர்புகளும் இலங்கையுடனான வணிக வர்த்தக அபிவிருத்தி கூட்டுப் படைப் பயிற்சிகள் போட்டி போட்டு வளர்ச்சி அடைய இந்திய மைய அரசு அனைத்தும் செய்கிறது. இவற்றுக்கு மத்தியில் மீனவர் படுகொலைகளும் துன்புறுத்தல்களும் சொல்லும் செய்தியாக எதனை எடுப்பது? தமிழர் விரோத அரசியலா அல்லது கடல் வளப் படுகையை இந்திய மீனவரிடம் இருந்து பறித்து அங்கே பெறக் கூடிய பெற்றோலிய மற்றும் நிலவாயுபடுக்கையை மக்களிடம் இருந்து பறித்து எடுக்கவா என்பது கேள்வியாக எழுகிறது.

புத்தளம் மன்னார் கடலடிப் படுகை தமிழகம் வரை நீண்டு கிடப்பது கெயில் நிறுவனம் ஏற்கனவே உறதி செய்துவிட்ட விடயம். தமிழகத்தில் மீதேன் வாயு திட்டம் அங்குள்ள விவசாய நிலங்கள் ஊடாக கொண்டு செல்ல வகுத்த திட்டமே அங்குள்ள விவசாய நிலங்களை அபகரிக்கும் நோக்கம் கொண்டதாகவே பார்க்கப் பட வேண்டும். அதற்கு முன்னேற்பாடாக இந்திய மீனவர்களை முற்றாக அந்தக் கடற் பகுதியில் இருந்து அகற்றி விடவே மோடியின் அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் மெத்தனமாக பார்க்கப்பட வேண்டும். ஈழத் தமிழினத்தையும் விடுதலைப் புலிகளையும் அழித்ததன் மூலம் இலங்கையில் மேற்கே புத்தளம் முதல் கிழக்கே பொத்துவில் வரையான கடல் தமிழர் ஆதிக்கத்தில் இருந்து பறிக்கப்பட்டு விட்டது. மன்னார் பகுதியில் காணப்பட்ட பெற்றோலியப் படிவங்கள் ஈழத் தமிழினம் அழிக்கப் படுவதற்கு சி ங்களத்தைப் பயன்படுத்திய இந்தியாவும் மேற்குலக நாடுகளும் இன்று தமிழக மீனவரிடம் இருந்து கடலைப் பறிக்க அதே சிங்களத்தைப் பயன் படுத்து கிறது என்பதே உண்மை.

இதனைப் புரிந்து கொள்வது எளிதாக இருக்காது. ஆனால் தஞ்சாவூர் தாமிர பரணி ஆற்றுப் படுக்கை வரை புத்தளம் மன்னார் பெற்றோலிய வளம் நீண்டு கிடக்கிறது என்பதை அறிந்து கொண்டவர்களுக்கு இது கடினமாக இருக்காது. அங்கேயும் கெயில் நிறுவனத்தின் மீதேன் வாயுத் திட்டம் கச்ச தீவுக் கடலிலும் தமிழக மீனவரின் கடல் வளம்.

ஈழத்து மீனவரின் நிலை மிக விரைவில் தீர்க்கப்பட்டு அவர்களுக்கு அங்கே உருவாக்கப்படும் அந்நிய ஆடைத் தொழிற்சாலைகள் உள்ளூர் மீன் வளர்ப்புத் திட்டம் என்பன மாற்றுக் கூலித் தொழில் வழங்கிச் சீர் செய்யப் பட்டுவிடும். அங்குள்ள இளம் தலை முறை அத்தகைய வாழ்வியலுக்கு இப்பொழுதே ஒரு நுகர் கலாச்சாரத்துக்கு உள்ளாக்கப் பட்டு வருகின்றனர். இச்செயற்பாடுகள் அனைத்திலும் இந்திய அரசும் அதன் துணைத் தூதுவரும் ஈடுபாட்டோடு உள்ளனர். இவர்களை இன்னமும் நம்பி ஈழத் தமிழர் அரசியல் உரிமை பேசுவோர் பரிதாபத்துக்கு உரியவர்களே.

இப்படியான களநிலையில் தமிழக சட்ட சபைத் தேர்தல் இடம் பெறுகிறது. ஈழத் தமிழின அழிப்பை நடத்திய காங்கிரஸும் தி.மு.க.வும் மீண்டும் ஒன்றிணைந்து தமிழக ஆட்சியைப் பிடிக்க இறங்கி உள்ளன. அதில் வெற்றி பெறும் வெறியுடன் அந்த 2 கட்சிகளும் ஆளும் அ.தி.மு.க.வுக்கு எதிராக வலுவான பிரச்சார போரில் இறங்கி உள்ளதோடு காவல் துறை மற்றும் நிர்வாக அதிகாரிகளை மனம் போனபடி மாற்றிப் பந்தாடி வெற்றியைத் தம்பக்கம் பெற்றுவிடத் துடிக்கின்றன.

ஆளும் அ.தி.மு.க.வுக்கு எதிரான குற்றச் சாட்டு எல்லா எதிர்க் கட்சிகளாலும் வைக்கப் படுவதோடு ஆட்சி மாற்றம் ஒன்றே தீர்வு என குரலே மேலோங்கி ஒலிக்கிறது. கடந்த நவம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளம் இயற்கைப் பேரிடர் அல்ல செம்பரவாக்கம் நீரேரி நிர்வாகப் பேரிடர் என்ற கூச்சல் பலமாக இன்னமும் கண்டறியப்படாத உண்மையாக தேங்கிக் கிடக்கிறது.

தமிழக அரசியலை இவர்கள்தான் தீர்மானிக்கும் நிலை வருகிறதா ? அப்படி வந்தால் என்ன விளவு ஏற்படும் என நினைத்துப் பார்க்கவே பயமாய் இருக்கு.

பலதரப்பாலும் வெளியாக்கப்படும் வாக்காளர் கருத்துக் கணிப்புகள் கட்சிகளின் பிரச்சாரமா அல்லது மக்களின் கருத்துக் குழப்பமா என தீர்மானிக்க முடியாத படி உள்ளன. மீண்டும் ஜெயலலிதா ஆட்சியைப் பிடித்தால் தமிழகமும் தமிழரும் ஓரளவாவது நன்மை அடைய முடியும். ஈழத் தமிழரின் அரசியலிலும் சிறிது காலத்துக்கு அவரது ஆதரவு தொடரும் வாய்ப்பும் உள்ளது.

ஆட்சி மாற்றம்தான் தீர்வு என்றால் தி.மு.க. காங்கிரஸ் கூட்டுதான் மீண்டும் வந்துவிடும் ஆபத்து அதிகமாகத் தெரிகிறது. அப்படி நடந்தால்; அது ஒரு தமிழ் இன விரோத அரசாக மீண்டும் மாறுவதை தவிர்க்க முடியாது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துகள்

2 வருடங்களாக உங்களை மகிழ்வித்த

# chitramTV

தற்பொழுது புதுப்பொலிவுடன்

# YUPPTV

உடன் கைகோர்த்துள்ளது

தடுப்பவையெல்லாம் தடைகளாகத்தான் இருக்கவேண்டும் என்பதல்ல நம்மை காக்கும் அரண்களாகவும் இருக்கலாம்.

தடங்கல்கள் வந்த காலங்களிலும் தளராது பெறுமை காத்து எம்மோடு இணைந்து நின்ற வாடிக்கையாளர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்




தொடர்புகளுக்கு: JEGAN 0041 76 588 78 79 - 0041 77 910 12 22

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

IMPOrtas
Cash & Carry

Cash & Carry in Zurich
Biggest Asian Shop in Swiss




IMPORTAS CASH & CARRY

Basler Str. 102, 8048 Zürich- Switzerland

Tel: +41 43 343 03 55 - Fax: +41 43 343 03 56

Direct Importers and Solo Distributors of

Kings Subash ELAKKIA Niru SURYAA Maliban Rubicon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Importas Cash & Carry, Baslerstrasse 102, 8048 Zurich, Switzerland. Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56



## விருந்தும் மருந்தும் - 4

# வாழைப் பழம்

உணவாக உடனடி சக்தியாக வயிற்றோட்டத்தை கட்டுப்படுத்தும் வாழைப் பழம்

தமிழ் இனத்தின் பண்பாட்டின் முத்திரையாக முக்கனிகள் விளங்குகின்றன. அவை முறையே மா,பலா,வாழை என்பனவாகும். நாம் எச்சு வையை பற்றி நினைத்தாலும் பேசினாலும் முதலில் வருவது இந்த மூன்று கனிகளுமே. இவற்றுள் மா, பலா என்கிற முதல் இரண்டு கனிகளும் பருவ காலங்களில் மட்டுமே கிடைப்பன. ஆனால் பேச்சு வழக்கிலே 3வது இடத்தில் வாழை வைக்கப் பட்டாலும் எமது அன்றாட வாழ்வில் அதுவே முதலாம் இடத்தை பெறுகிறது. அதற்கு காரணம் அது வருடத்தில் எல்லா நாட்களிலும் எம் வாழ்வுக்கு அறுசுவை விருந்தாகி மகிழ வைப்பதோடு பல நோய்களும் பிணிகளும் நம்மை அணுக விடாது எமது உடலில் எதிர்ப்புச் ச க்தியை வலுவோடு வைத்திருக்க உதவுகிறது.

வாயில் வைத்ததும் நாவின் சுவை அரும்புகளைத் தட்டி எழுப்பி அற்புதமான சுவையையும் மனதுக்கு உற்சாகத்தையும் தர வல்ல வாழைப் பழத்தை யார்தான் விரும்பிச் சாப்பிட மாட்டார்கள்?

அதனால்தான் உலக மக்களின் நிரந்தரமான உணவாக அரிசி, கோதுமை, சோளம் போன்ற வற்றுக்கு அடுத்த முக்கிய உணவுப் பொருளாக வாழைப்பழம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்கர்களால் அதிகம் விரும்பி உண்ணப்படும் பழமாக வாழைப்பழம் உள்ளது. நாம் மிகவும் ஆர்வத்தோடு நேசிக்கும் அப்பிள் பழம் அவர்களுக்கு 2ம் பட்ச தெரிவாகத்தான் உள்ளது.

வாழைப் பழம் கிருஸ்துவுக்கு 5000 வருடங்களுக்கு (சிலர் 50000 வருடங்கள் என்பர்) முன்பிருந்தே பயிரிடப் படுவதாக நம்பப் படுகிறது. எமது தமிழர் வரலாற்றில் இலக்கியப் பதிவுகள் வாழைப்பழம் முக்கனிகள் என வகைப் படுத்தி யிருப்பதால் வாழைப்பழம் தமிழ் மக்களின் உணவாக நிச்சயமாக தமிழ் மொழி உருவாகும் முன்னரே இருந்திருக்க வேண்டும். எனவே 5000 வருடங்கள் என்ற காலக் கணிப்பு மிகக் குறைவானதாகவே காணப்படுகிறது.

தமிழர் திருநாள் எதுவாக இருப்பினும் அவை நல்லதோ கெட்டதோ வாழைப் பழம் இல்லாத நாளே கிடையாது எனும் படிக்கு எம்மோடு ஊறிவிட்ட ஒன்றாக உள்ளது. அதற்குக் காரணம் நலமான வாழ்வுக்கு வாழை மிகப் பெரும் பங்காற்ற முடியும் எனத் தெரி;ந்து கொண்ட எமது முன்னோர் அதனை எமது அன்றாட வாழ்வுடன் பிணைத்து அனைத்து மக்களும் தம்மை அறியாமலே தமது உடல் நலத்தைப் பேணவைத்தனர் என்பதே உண்மை.

எப்படி தோப்புக் கரணம் ஒரு சிறந்த உடற் பயிற்சி எனத் தெரிந்து அதனை எக்காரியத்தை தொடங்கும் முன்னரும் பிள்ளையார் வழிபாடு என்ற மதச் சடங்கோடு தொடர்பு படுத்தி அதனை எமது அன்றாட வாழ்வுடன் இணைத்து வைத்தார்களோ? அதே முறையில் வாழைப் பழத்தையும் கடவுள் வழிபாட்டுடன் இணைத்து மக்களின் கட்டாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுகளில் ஒன்றாக்கி மக்களின் நல்வாழ்வுக்கு உறுதியான வழி சமைத்தனர். இஸ்லாமிய பண்பாட்டிலும் வாழைப் பழம் சொர்க்கத்தின் உணவாக கருதப்படுகிறது.

## வாழைப் பழத்தின் சிறப்புகள்:

உயிர்ச் சத்து (விட்டமின்) ஏ, பிகொம்கிளெக்ஸ்(தொகுப்பு) பி 6. சி அத்துடன் 75 சத வீதம் நீர்ச்சத்து. மேலும் முக்கிய சத்துகளான பொட்டாசியம், மங்கனீஸ், புரதம், பொஸ்பரஸ், கல்சியம், இரும்பு, காபோகைட்றேட்ஸ் மற்றும் நார்ச்சத்து கொண்ட ஒரு சமச் சீரான சிறு உணவுப் பெட்டகமாக விளங்குகிறது.

பழம் இப்படி என்றால் சில ஆசிய நாடு களில் அதன் இலைகளும் சமைத்து உணவாக உட்கொள்ளப் படுகிறது. ஆனால் நமக் கெல்லாம் வாழைக்காய் பஜ்ஜி, கறி, பொரியல், சுண்டல் எனப் பல அவதாரம் எடுத்து எமது அறுசுவை உணவாக மகிழ்ச்சிப் படுத்துகிறது. அதே நேரத்தில் எமது உணவுச் செரிமானத்தை சுலபமாக்கி மலச் சிக்கலைப் போக்கி உடல் நலத்தை உயர் நிலையில் வைக்கிறது.

மேலை நாட்டவரின் உணவு மேசையிலும் வாழைப் பழம் பலவித சிறப்புப் பானங்களாவும் மென் உணவு களிகளாகவும் ஆட்சி செலுத்துகிறது. அதில் காணப்படும் பெக்ரின் என்ற சத்து தீராத மலச் சிக்கல் பிரச்சினைக்கு மிகச் சிறந்த மருந்தாக செயற்படுகிறது. அது குடற் புண்களை குறைத்து குடற் புற்று நோய்கள் ஏற்படக்; கூடிய ஆபத்துகளை தடுக்கிறது. வாழைப் பழத்தில் காணப்படும் அமில எதிர்ப்புச் சக்தி செரிமானக் குடலில் அமிலத்தைக் கட்டுப்படுத்தும் இயற்கை மருந்தாக செயற்படுகிறது.

புகைப் பிரியர்களின் பிரியமான வைத்தியர். நீங்கள் ஏற்கனவே புகைத்தல் பழக்கத்தை பல தடவைகள் கைவிட முயன்று தோல்வி அடைந்திருக்கலாம். அதற்குக் காரணம் புகைத்தலை நிறுத்தியதால் ஏற்பட்ட சோம்பல் உணர்வு, தலை வலிகள், வயிற்றுக் குமட்டல் உழைவு, சிடுசிடுப்பு மற்றும் மன அழுத்தம் காரணமாக மீண்டும் புகைக்க தொடங்கி இருப்பீர்கள்.

அத்தகைய அனுபவத்துக்கு ஆளானவர்கள் வாழைப் பழத்துக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கிப் பார்த்தால் பகைத்தலை முற்றாக கைவிடுவது எளிதாகிவிடும். வாழைப் பழத்தில் உள்ள அதிக அளவிலான பொட்டாசியம், மக்னீசியம் மற்றும் முக்கியமான உயிர்ச் சத்துகள் உங்கள் மூளைப் பகுதிக்கு புகைத்தலால் கிடைக்கும் நிக்கொடின் தாகம் எடுக்கும் பொழுது ஒரு ஆறுதலைக் கொடுத்து இதமான சுகத்தை தருகிறது. மேலும் வாழைப் பழம் புகை மறுத்தலால் ஏற்பட்ட புத்துணர்ச்சி இழப்பை ஈடு செய்து கால்களில் ஏற்படும் தசைகள் இறுக்கத்தை குணப் படுத்து கிறது.

இத்தனை நன்மைகள் தரும் வாழையை தமிழர் தமது அன்றாட வாழ்விலும் பண்பாட்டு சமய விழாக்களிலும் மங்கல மற்றும் அமங்கல விழாக்களிலும் ஒட்டி உறவாட வைத்திருப்பது ஆச்சரியத்தை தருகிறது. வாழையின் மருத்தவ சிறப்புகளால் மக்கள் தவறாமல் நன்மை அடையும் பொருட்டு செய்திருப்பது தமிழரின் மருத்துவ அறிவுக்கும் மதி நுட்பமாக அன்றாட வாழ்வுடன் தவறாமல் இருந்து உபாயங்களும் அதிசயிக்கத் தக்கவை.

வாழையின் மருத்துவ சிறப்புகளை நன்கு தெரிந்து புகைப் பழக்கத்துக்கு அடிமையாகி அவதிப் படுபவர்கள் அதனிடமிருந்து விடுதலை பெற வாழைப் பழத்தை நன்கு பயன்படுத்தி நல்வாழ்வு பெற வாழ்த்துகிறோம்.

ஜேர்மனியில் தரம், உத்தரவாத்துடன் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழ்ர் நிறுவனம்.

R. Ragunathan
Parkhof Str. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81

ஆசியா சமுத்திரம்
Sittard Str. 21
41061 Mönchengladbach
Tel: 02161 9028388
Fax: 02161 9028399

TJB BROTHERS

SUN TV மற்றும் VIJAY TVயின் விநியோகிஸ்தர்

Bank Details: R.Ragunathan
IBAN: DE55 3907 0024 0474 1153 00
BIC: DEUT DE DB 390 (Deutschebank)

VIJAY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SwissLife Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள்.உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.







உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரம் கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்...




அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்.




Sägestrasse 79
3098 Köniz

Telefon: 031 915 00 50
Telefax: 031 915 00 60
Handy: 079 889 60 65
eMail: Krishnasamy.Thileepan@swisslife-select.ch
Internet: www.swisslife-select.ch




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16



# நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

**தேவன்**

ஒரு இனத்தின் அழிவு எங்கிருந்து ஆரம்பிக்கிறது ஆராயத்தொடங்கினால், அது ஒவ்வொரு இனங்களையும், ஒவ்வொரு விதமாகச் சுட்டிக்காட்டுகிறது. சில இனங்கள் புவியியலளவில் அழிக்கப்பட்டாலும் அது தனது வாழ்விடங்களை வேறோர் இடத்திற்கு மாற்றியமைத்துக்கொள்கின்றன. இதற்கு உதாரணமாக யூதர்களைக் குறிப்பிடமுடியும். திபெத் மக்களின் அடிப்படை வாழ்வியலான பௌத்தக் கட்டுமானங்களில் கைவைத்தபோது திபெத்தியர்கள் உலகம்முழுவதும் சிதறிவாழத்தலைப்பட்டார்கள். தென்னமெரிக்காவின் மாயன்கள் தொடங்கி, ஈழத்தமிழர்கள் வரை எல்லோரையும் ஏராளமான தொன்மை வாய்ந்த இனங்கள் இந்த அழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சொந்த இடத்திலேயே அழிந்துபோன இடங்களை விட, பரவிவாழத் தலைப்பட்ட இனங்கள் அப்போதைக்கு வேண்டுமானால் தப்பித்துக்கொண்டதாக வைத்துகொள்ளலாம். ஆனால் காலப்போக்கின் மாற்றத்தில் பரவி வாழ்ந்த இடத்தின் கலாசாரத்திற்கு ஏற்ப தங்களையும் மாற்றி, அவர்கள் அப்படியே அழிந்து போனார்கள் என்றே சொல்லமுடியும். இதற்கான இறுதி உதாரணமாக தமிழர்களைக் குறிப்பிட முடியும். இன அழிப்பு என்ற வரையறைக்குள் தனியே ஒரு இனமும் அதன் கலாசார மற்றும் விழுமியங்கள் மட்டுமே சிக்கிக்கொள்வதில்லை. அது காலம் காலமாக நிருவகித்த கட்டுமானங்கள், தொன்மைவாய்ந்த இலக்கியங்கள் ஆகியவையும் அடங்குகின்றன.

இன அழிவினை மூன்றாக வகுக்கமுடியும். போர், பேரிடர் மற்றும் நாடுகடத்துதல் ஆகியனவே அவையெனலாம்.

பேரிடர்களால் அழிக்கப்பட்ட இனங்களுள் தமிழினமும் இடம்பெறுகிறது. சங்ககாலத்தில் ஏற்பட்ட படுமோசமான ஆழிப்பேரலையில் சிக்குண்டு தமிழினம் இழந்தவை ஏராளம். அங்கிருந்து எஞ்சியவையே திருக்குறளும், ஏனைய காப்பியங்களும். எஞ்சியன மட்டுமே இவ்வளவு என்றால், அழிந்துபோனவை எவ்வளவாக இருக்கும் எனக் கணக்கிட்டுப்பாருங்கள். இது தமிழினத்தை இயற்கை அழித்ததன் விளைவு. பின்னாளில் வந்த பிறநாட்டுப்படையெடுப்புகள் காரணமாக தமிழர்கள் பல்வேறு நாடுகளுக்கு அடிமைகளாகக் கடத்தப்பட்டார்கள். பின்னர் நிகழ்காலப்போர்கள் தமிழரின் அழிவிற்கு மென்மேலும் வித்திட்டன.

மேற்கூறிய இனவழிப்பிற்கான வரைவுகள் அனைத்துமே ஐ.நா வினால் அறியப்பட்ட மற்றும் உலகம் பூராகவும் நிகழும் இனவழிப்பிற்கான தகவல்கள். இவைகளைத்தவிர சாதிப்பூச்சுப் பூசப்பட்ட இனவழிப்பொன்று தமிழ்மண்ணில் சொல்லாமல் நிகழ்ந்தது. அது சொல்லப்படாமல் போன, தன்னினத்தைத் தானே அழித்த , ஐ.நாவின் வரைவுகளுக்குட்படாத, உலகம் அறியாத இனவழிப்பு. அதுதான் தமிழ் மண்ணில் வேரூன்றிய சாதியம்.

சாதியம் என்பதை நம்மவருக்குப் புரியவைக்க அதிகமான சொல்லாடல் தேவையில்லை. ஊரைச்சொன்னாலே சாதியைச்சொல்லியழைக்கும் வரைமுறை இன்னமும் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. எம்மண்ணில் நிகழ்த்தப்பட்ட இறுதிப்படையெடுப்பான ஆங்கிலேயர் ஆட்சியின்போது தமிழரைப்பிரித்தாளுவதற்காக ஆங்கிலேயரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிமுறைமை தூண்டிவிடப்பட்டது. அதற்கு அவர்கள் இலகுவான முறைமை ஒன்றைக் கையாண்டார்களாம். என்னவெனின் ஆங்கிலேயரை அனுசரித்து, அவர்தம் சட்டங்களைமதித்துச் செயற்பட்ட தமிழர்களை அவர்கள் உயர்ந்தசாதி என்ற மாயவலைக்குள் தள்ளி விட்டார்கள். நம்மவர்களுக்கும் சொல்லவா வேண்டும். வேளாண்குடிப் பெருமக்கள் என்ற அடிப்படைப் பண்பிலிருந்து உடனடியாகவே மாறி, ஆங்கிலேயரைப் பின்பற்றத் தொடங்கினர் நம்மவர். கொஞ்சம் கொஞ்சமாக, ஆங்கிலேயரோடு இணைந்துகொண்ட படித்த சமூகம் தாமே "வெள்ளாளர்கள்" என்ற பெயரைச் சூடிக்கொண்டது. இதனை காலம்காலமாக ஏற்று நடந்தவர்களுள் நமது சந்ததிக்கு ஓரளவு அறிமுகமுடைய இருவரைச் சொல்லமுடியும். ஒருவர் ஆறுமுகநாவலர், மற்றையவர் சேர். பொன்.இராமநாதன்.

வெளியில் சித்தாந்தம் பேசிக்கொண்டாலும், உள்ளே பலருக்கு இந்தச்சாதிமுறைமை நன்கு பிடித்திருந்தது என்றே சொல்லமுடியும். ஆனால் அவர்கள் அதனைப்பிரித்துக்கொண்ட விதம் மிகவும் பரிகாசத்திற்குரியது. உதாரணமாக் கோவிலில் தொண்டு செய்பவர்களைப் பண்டாரம். என்றழைத்த வேளாளர் சமூகம், அவர்களை தம் சொந்தவீட்டிற்குள் அனுமதிப்பதில்லையாம். ஆனால் கோவிலே உயர்ந்த இடமென்று போற்றிக்கொள்வதிலும் வேளாளர்கள் சளைத்தவர்களல்ல. அப்படியானால் கோவிலினுள் அனுமதிக்கப்பட்ட பண்டாரம், ஏன் அவர்கள் வீட்டினுள் அனுமதிக்கப்படக்கூடாது...?

கள்ளுச்சீவும் தொழிலாளர்களை "சீவல்காரர்" என்றழைத்த வேளாளர்; பின்கதவால் கள் எடுப்பித்து அருந்திய பரிகாசங்களும் உண்டு. சரி இவையெல்லாவற்றையும் விட்டுவிடுங்கள், ஆங்கிலேயரோடு இணைந்து வேளாளர் புரிந்த இன்னுமொரு மன்னிக்கமுடியாத குற்றமுண்டு. அதாவது; ஆங்கிலேய ஆட்சிக்குமுன்னிருந்த "மறவர்" குலத்தின் அழிவிற்கு வித்திட்டமையே அதுவாகும்.

மறவர்கள் என்ற குழுவினர் போரில் வல்லமை மிகுந்த வீரர்கள். இவர்களை அடக்குவது ஆங்கிலேயருக்குக் கடினமாக இருந்ததாம். அதற்காக ஆங்கிலேயர்கள் ஒரு வழிமுறையைக் கையாண்டார்கள். அதாவது மறவர்கள் குழுவிலிருந்த ஒரு சிலருக்கு மூளைச்சலவை செய்து, அவர்களைத் தம்வசப்படுத்தி. அவர்களே தமிழர்களில் மேன்மைகொண்டவர்கள் என மக்களுக்கு அறிவுறுத்தியதோடு, மறவர்குலமென்பது மிகவும் கேவலமான செய்கைகளைக் கொண்ட குழு என்பதுவான கருத்தை, தம்வசப்படுத்திய மறவரைக் கொண்டே பரப்பினார்கள். அது ஆங்கிலேயர் எதிர்பார்த்ததைவிட மிகவும் வேகமான பயன்கொடுத்ததெனலாம்.

இவ்வாறு மறவர் குலம் தேய்ந்துபோனாலும், அதற்குள்ளிருந்து இலட்சிய உறுதியோடு ஆங்கிலேயருக்கு எதிராகப்போராடி மடிந்த மறவர்கள் பலருண்டு. மறவர் என்ற சொல் சாதாரண சொல் அல்ல என்பது எம்மவரை விட ஆங்கிலேயருக்கு நன்கு தெரியும் என்பதுவே உண்மை.

காலத்தின் தொடர்ச்சியில், தொழில் முறையை வைத்து சாதிப்பெயர்கள் உருவாக்கப்பட, வேளாளர்கள் உயர்ந்த குடிகள் என்ற பெயரைத் தமதாக்கிக்கொண்டார்கள். வயல்வெளிகளிலும், கடலிலும், ஆற்றங்கரைகளிலும், காற்றிலும் நெருப்பிலும் பாடுபட்டு உழைத்தவர்களை மீண்டும் மீண்டும் சகதிக்குள்ளேயே தள்ளிவிட்டார்கள் வெள்ளாளர் என்ற பெயர்கொண்ட நம்மவர்கள். ஆங்கிலேயக் கல்விமுறை தவிர்ந்த, வேறெதுவும் அறியாத ஆங்கிலேயக் கைப்பிள்ளைகளாக வேளாளர் குழு சொகுசாக இருக்க, உடலுழைப்பைக் கொட்டி மண்ணை வளப்படுத்திய உழைப்பாளிகள் சாதிய வரம்பிற்குள் சிக்கித் தவிக்கலானார்கள். வேதனை என்னவெனின் அவர்களும் அப்படியே கட்டுப்பட்டு வாழப்பழகியமையேயாகும்.

"நாங்கள் வெள்ளாமாக்கள்" என்ற வசனத்தை எனது அப்பப்பா அடிக்கடி பிரயோகிப்பதுண்டாம். நல்லவேளை அவரை நான் சந்திக்கவேயில்லை. சந்தித்திருந்தால்; "வெள்ளாளர்" என்ற சாயம் பூசப்பட்ட அவரது அழுக்குக் கோவணத்தை உருவிக் கிழித்திருப்பேன்...

- முடிச்சுகள் அவிழும் -

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.
www.mediaasia.in
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்**

# வரசித்தி மஹால்
# Varasithy Mahall

வரசித்தி மஹால்
Varasithy Mahall

Hüttenwiesenstrasse 6
8108 Dällikon Zürich.

சகல விதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும் நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில், அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில், மனம் கவர்ந்த, ஒரே அழகிய மண்டபம்...

# வரசித்தி மஹால்
# Varasithy Mahall



**800 இருக்கை வசதியும் - 400 வாகன தரிப்பிடமும் கொண்ட மண்டபம்.**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K. Kowthaman | S. Manivannan | K. Vijayasuresh |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

varasithymahall@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை



வணக்கம் பாருங்கோ, எப்பிடிச் சுகமாய் இருக்கிறியளோ,

கோடை வெயில் தகிக்கிற நேரத்தில எப்பிடிச் சுகமா இருக்கமுடியும் எண்டு நீங்கள் கேக்குறது விளங்குது பாருங்கோ. ஆனாலும், வெயிலும் இந்த உலகத்துக்குத் தேவை தானே பாருங்கோ. நெடுகக் குளிர்லையே கிடக்க ஏலுமே ..? அதுதான் வெயிலையும் நாங்கள் வரவேற்கப் பழகிக்கொள்ள வேணும் பாருங்கோ. வெயில் மட்டும் வெம்மை இல்லைப் பாருங்கோ. அப்படி வெம்மையை இருந்தாலும் அது சூரியன் மறையக் கொஞ்சம் குறைஞ்சிடும். ஆனால், இப்பவெல்லாம் கண்ணால பாக்குற சில விடயங்களும், காதால கேக்குற சில விடயங்களும் பயங்கர வெம்மையாய் அல்லே கிடக்கு. இயற்கையின்ர வெம்மையைத் தீர்க்கலாம், செயற்கையான வெம்மையை எப்பிடித் தீர்க்கிறது எண்டு தெரியேல்லை. அது எல்லாத்தையும் விடக் கொடூரமாக் கிடக்குப் பாருங்கோ. மனிசன் எப்ப அதிகாரத்துக்கும் பெயர், புகழுக்கும் ஆசைப்பட ஆரம்பிச்சானோ, அண்டைக்கே அவன் சாக்கடையிலயும் வாழப்பழகீட்டான். துர்நாற்றம் பற்றி அவனுக்குக் கவலையில்லை. மேனி மினுமினுப்பா இருந்தாப் போதும் எண்டு நினைச்சுக் கொண்டு என்ன வேணுமெண்டாலும் செய்யத் தொடங்கீட்டாங்கள். உப்பிடியான ஆக்களாலதான், உலகம் இன்னும் இன்னும் வெப்பமடைஞ்சு கொண்டே போகுது பாருங்கோ. உப்பிடியான மனிசரால இயற்கையே நாசமாகுது எண்டா பாருங்கோவன்.

விசயம் என்னெண்டாப் பாருங்கோ, உப்ப கிட்டடியில ஐரோப்பிய நாடொண்டுக்கு இலங்கையின்ர சனாதிபதி மைத்திரி வந்திருந்தவர். எல்லாரும் கேள்விப்பட்டிருப்பியள் எண்டு நினைக்கிறன். அவர் சமாதானம் பேச வந்தாரோ இல்லைச் சம்பந்தம் பேச வந்தாரோ அது எங்களுக்குத் தேவையில்லை. அவர் வந்து உங்கின திரிஞ்சு கொஞ்சம் தமிழ்ப் பிரமுக்கர்களைச் சந்திக்க முயற்சி எடுத்தவராம். இலங்கையில நல்லாட்சி நடக்குது எண்டு காட்டுறதுக்கு அவர் உப்பிடி எல்லாம் நாடகம் ஆடுவர் எண்டு தெரியும்தானே. சரி, அவர் ஏதோ தன்ர அலுவலைப் பாக்கட்டும். ஆனால், உங்க இருந்து சில தமிழ்த் தனித்தவிலுகள் விழுந்தடிச்சுப் போய்ச் மைத்திரியைச் சந்திச்சவையாம். அவையின்ர சந்திப்பால நல்லாட்சி மலர வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகுது. உவையின்ர இலக்கணத்தைப் பற்றித் தான் சொல்லுறேன். நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டு சொல்லுங்கோவன் மக்களே ...?

பளபள பட்டுவேட்டி, தோளில துண்டு சகிதம் மேடையளில ஏறி நிண்டுகொண்டு, தமிழ்ப் பரிவாரங்கள் போலக் காட்டுறதில, உந்தச் சந்திப்புக்காரர் போபோன ஆக்கள் எண்டு இந்த உலகத்துக்கே தெரியும் பாருங்கோ. வெள்ளை வெளோர் எண்டு பல்லுக்காட்டிச் சிரிச்சால், ஐயோ இப்பிடியும் ஒருத்தன் உலகத்தில இருக்கிறானோ எண்டு நினைக்கிற அளவுக்கு அன்பாப் பொழியுற ஆக்கள்தான் உவை பாருங்கோ. அடிக்கடி தமிழைப் பற்றியே ஆராய்ச்சி செய்து, அதுக்குத் தோரணம் கட்டுறதில உவைக்கு நிகர் உவை தான். ஏதோ, தமிழ் மண்ணுக்க புதைஞ்சு கிடக்கிற மாதிரியும், உவைதான் தோண்டி எடுக்குறதுக்கான வேலை பாக்கிற மாதிரியும்தான் உவயின்ர நடவடிக்கைகள் இருக்கும் பாருங்கோ. அதிலையும் மேடையில ஏறிட்டால் ஒரு படி மேல. திருவள்ளுவர் எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காச் சொல்லத்தெரியாட்டிலும், குறளைக் கோதிக் கொந்தல் போடுறதில உவையெல்லாம் குட்டி அணிலுகள். எட கோதாரி, நீட்டி முழக்குற அளவுக்கு, செயலும் அப்படி அல்லே இருக்கோணும். சரி அதைத்தான் விடுங்கோ, நீங்கள் மைத்திரியைச் சந்தியுங்கோ இல்லை பைத்தியத்தைச் சந்தியுங்கோ அது தேவையில்லை. ஆனால், தமிழை வளர்க்குறதுக்கு எதுக்கடா சிங்களவனோட கைகோர்க்க வேணும்..? எனக்கெண்டா ஒண்டுமா விளங்கேல்லைப் பாருங்கோ.

ஊரில உள்ள தமிழ்ப் பிள்ளையளைப் பிடிச்சு, சிங்களம் படிப்பிச்சு நாசமாக்குறான் அவன் . வேணுமெண்டா அதை நிறுத்தச் சொல்லி ஏதாவது மைத்திரியிட்டக் கேட்டிருப்பானுகளோ. இனி அப்பிடித் தான் வெளீல கதை பரவும். முப்பது வருசமா, இலட்சக்கணக்கில எங்கட சனத்தை அழிச்சு, எங்கட மண், மொழி, பாரம்பரியத்தை அழிச்சு, கொஞ்சம் கொஞ்சமா எங்களைக் கூறு போடுறவனோட கை நனைச்சு விருந்து விழுங்கிற உங்களையெல்லாம் எந்த வகையறாவில சேர்க்குறது எண்டு விளங்கேல்லை. ஏனடாப்பா வீட்டில வடிவாச் சமைக்கிறதில்லையே ..? எடே நாதாரியளே, நீங்கள் நாவில தடவினது தமிழரின்ர இரத்தமடா. உன்ர சகோதரங்களின்ர சாவில கூத்தாடுற உங்களுக்குக் கும்பி பாகம் வைச்சாத்தான் இனி மற்றவன் கனவிலையும் உப்பிடியான கேவலமான வேலையளுக்குப் போகானுகள். இதில பெரும் பகிடி என்னவெண்டால், இஞ்ச தமிழரின்ர விடுதலைக்கான மேடையளில ஏறி, உவங்கள் புசத்தேக்க ஐயோ, காது குடுத்துக் கேக்க முடியுறேல்லை பாருங்கோ. ஏன் எண்டால், தமிழும் வீரமும் சும்மா பெருக்கெடுத்து ஓடும். பாக்கிறவன் அப்பிடியே புளங்காகிதமடைஞ்சு மயிர்கூச்செறிய நிப்பான். உதிலையும், ஒழுங்காப் பேசுறாங்களோ இல்லையோ, அடிக்கடி தோளில உள்ள துண்டைச் சரிப்படுத்திக் கொள்ளுவினம். ஏன் எண்டால் அதுதான் அவையின்ர பெருமையின்ர அடையாளமாம். கோதாரி, வாயில வருது நல்லா சிங்களவனோட கைகோர்த்து, அவன் போட்ட எலும்பை நக்கிப்போட்டு வந்த உங்களுக்கு எங்கேயடா பெருமை இருக்குது.?

மற்ற மொழிகளை விட தமிழ் மொழி வீரம் கலந்த மொழி. அந்த மொழியையைப் பேசுறவனுக்கு இயற்கையிலேயே ஒரு வீரம் இருக்கும். தமிழன் யாரிடமும் கையேந்தி வாழமாட்டான். போராடும் குணம் தமிழனுக்கு அதிகம். இவங்கள் என்னடாவெண்டால் தமிழையே விக்குறாங்கள். இதில வேட்டி, வெள்ளைச்சட்டை வேற. என்ன கொடுமை சரவணா...? உங்க உதுவரைக்கும் மகிந்த மற்றும் மைத்திரியைச் சந்திச்ச ஆக்கள் என்ன வெட்டிப் புடுங்கினவை. அதுக்குள்ள உவை வேற வெட்டி அடுக்கப்போயிருக்கினம். உவங்களில கொஞ்சப் பேருக்கு எங்கையாவது பேசுறதுக்கு மேடையும், கைதட்டுறதுக்குக் கொஞ்சச் சனமும் இருந்தால் போதும். எங்க பாப்பம் உந்த மைத்திரி விசயத்தையும் ஒருக்கா மேடையில சொல்லுங்கோவனடாப்பா. சனம் கைதட்டுதோ கல்லெறியுதோ எண்டு ஒருக்கா பாப்பம்...

உதுக்குள்ள இன்னுமொரு விசயம் நடக்குது என்னவெண்டா பாருங்கோ, மைத்திரியே வந்தாலும் போய் சந்திச்சு, புகைப்படம் எடுக்கிறதுதான் ஊடக தர்மம் எண்டும், அதுதான் ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக நடுநிலைமை எண்டும் கருத்தரங்கம் ஒண்டு நடக்குது பாருங்கோ. அதில அரிசி பருப்பு விலை உட்பட, சகல விதமான மளிகைப் பொருட்கள் பற்றிய ஆய்வும் நடக்குது. அரசியல் எண்டால் அப்படித் தானே பாருங்கோ. என்ன நான் ஏதும் பிழையா விளங்கி வைச்சிருக்கிறனே, இல்லைத்தானே..? உப்பிடியான ஊக்கிகள் இருக்கேக்க, உவங்கள் போய்ச் சந்திக்கிறதும் தப்பில்லைத் தானே. எட கண்றாவி, உண்மைக்கு முன்னால நடுநிலைமை எண்டது கிடையாது எண்டு உந்தக் கருத்தரங்கம் பண்ணுற ஆக்களுக்குத் தெரியெல்லைத் தானே பாருங்கோ. சரி, ஒரு விசயம் பாருங்கோ , அப்பிடி மைத்திரியைப் பற்றிப் பேசுறதும், அவரோட படம் எடுக்கிறதும் தான் ஊடக சுதந்திரம் எண்டு சொல்லி ஊடக சுதந்திரத்தை நிலை நாட்டுற ஆக்களிட்ட நான் ஒண்டு கேக்கட்டே...? எங்க துணிவிருந்தால்; கொழும்பு விமான நிலையத்தில போய் நிண்டுகொண்டு, தேசியத்தலைவரைப் பற்றியும், விடுதலைப் புலிகளைப் பற்றியும் கதையுங்கோ பாப்பம் என்ர குஞ்சுகளே... நல்ல ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக நடுநிலைமை பற்றி அப்ப காட்டுவானடி சிங்களவன் உங்களுக்கு. ஐரோப்பிய நாட்டில நாலு சுவருக்குள்ள இருந்துகொண்டு, என்ன வேணுமெண்டாலும் கதைக்கலாம் எண்ட துணிவு...? உந்தக் கருத்தரங்கத்தில விசயம் தெரியாமல் போய்ச் சிக்குப்பட்ட ஒரு அறிவிப்பாளர் பெரும் பாவம். அந்தாள் என்ன கதைக்கிறது எண்டு தெரியாமல் முழுசிக்கொண்டு இருக்குது.

பேசாமப் பேசாம இருந்து - கோழிக்
குஞ்சுகளைத் தூக்குதடா பருந்து
பாக்காம பாக்காம இருந்து - உன்
கோவணமும் போகுதடா பறந்து ...

- அப்ப வரட்டே -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A
A K M
M

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)

Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்!!!

# தமிழர்களுக்கு தேவையான அனைத்து விதமான உணவுப் பொருட்களின் மொத்த, சில்லறை விற்பனை நிலையம்




மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய
இலாபம் A.K.M இல் மட்டும் தான்!

அன்பான உங்கள் ஆதரவால் முன்னனியில்
திகழும் A.K.M நிறுவனத்தினர் உங்களுக்கு
நன்றிகளை தெரிவிக்கின்றனர்

A
A K M
M

A.K.M முத்திரைபதித்த அனைத்து பொருட்களையும் ஒரு முறை சுவைத்தால்
ஈழுத்து சுவை உங்கள் நாவில் ஆழமான தனிச்சுவைதரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு கிழக்கு மக்களின் தலைகளில்

## 130,000,000,000 ரூபா கடன் சுமையா?

65,000 வீட்டுத் திட்டம் மீள் பார்வை அவசியம். எதற்காகப் பொருத்து வீடுகள்?



65,000 வீட்டுத் திட்டத்தை ஏற்கா விட்டால் இரணைமடு நீர் வழங்கல் திட்டம் போலாகி விடும். உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என முன்னாள் அமைச்சர் டக்லஸ் கோரிக்கை வைத்துள்ளார் என்கிறது செய்தி.

அரசின் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை ஆதரிப்பதும் விமர்சிப்பதும் அவரவர் கருத்துச் சுதந்திரம் என இன்றைய நல்லாட்சியில் கூட அனுமதிக்காது போனால் அது நல்லாட்சி ஆகவே இருக்க முடியாது. தமிழ் மக்களைப் பொறுத்த வரை அது நல்லாட்சியே கிடையாது என்பது என்றோ உலகறிந்த உண்மை என்பது வேறு விடயம். இங்கு நாம் விமர்சிக்க விரும்புவது இந்த திட்டம் யாருக்காக எதனால் கொண்டு வரப்படுகிறது என்பதே.

போரினால் அழிவுக்கு உள்ளான அல்லது இராணுவத்தால் அழிக்கப் பட்ட பொது மக்களின் வீடுகளை மீளக் கட்டி எழுப்புவது என்ற நல்ல நோக்கம் இத்திட்டத்தில் காணமுடிகிறதா? அப்படியானால் அவை அதே மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் விதத்தில் வடிவமைக்கப் படுகின்றனவா? 25 வருடங்களுக்கு மேலாக வீடுகளை இழந்து அவதி உறும் மக்களுக்கு இவை நீதியான நேர்மையான பரிகாரமா? இத்தகைய கேள்விகளுக்கு அரசோ அரசின் அமைச்சர் எம்.சுவாமிநாதனோ பதில் காணும் தார்மீகப் பொறுப்பை காண்பிக்க வேண்டாமா?

முதலாவதாக அரசின் நடவடிக்கையால் அழிவுற்ற வீடுகளை அரசே கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற நன்னோக்கு உண்மையானால் மேற் கூறப்பட்ட கேள்விகளுக்கு நிதானமான பதில்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அரசு ஒன்றும் தானமாக தருமமாக மக்களுக்கு இதனைச் செய்து கொடுக்க முன்வந்திருப்பதாகக் கூற முடியாது. ஏனென்றால் அது போர் முடிந்து 7 வருடங்கள் நிறைவுறும் தருணத்தில் செய்வதாகக் கூறுவது நல்லாட்சியின் பெயருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமாக இருக்காது. அதனை உடனடித் தேவை என டக்ளஸ் இப்பொழுது அவசரப் படுத்துவது சும்மா வந்தால் பொலிடோலும் குடிக்கலாம் என்பது போன்ற பேச்சாக உள்ளது.

இந்த திட்டத்துக்கான நிதி அரசின் நிதியிலிருந்து வரவில்லை. மாறாக புண்ணியத்துக்கு (?) இந்திய அரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட திட்டம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னர் 1 இலட்சம் வீடுகளாகப் பேசப்பட்டு அதில் 50,000 வீடுகளை யார் யாருக்கோ கொடுத்ததாக கணக்கிடப் பட்டு இப்பொழுது 65,000 வீட்டுத் திட்டம் எனப் பேசப்படுகிறது. தானத்துக்கு வாங்கிற பசுவின் பல்லை பார்க்கக் கூடாது என்கிற தர்ம போதனையும் உண்டு.

கோதானம் என்று சாகும் தருவாயில் உள்ள வயதான பசுவைக் கொடுத்துப் புண்ணியம் தேடும் தந்திரத்தின் மூலம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் சுயநலம் உண்டு. மாட்டின் பற்களைக் கணக்கிட்டு அதன் முதுமையை ஆரோக்கியத்தை அறிய முடியும். எனவே இந்த வீடுகளை தானமாகப் பெறும் தரித்திரவான்கள் தமிழர்கள் என்ற பொதுமையில் அமைச்சர் சுவாமிநாதனும் சிங்கள இந்திய அரசுகளும் நினைத்துச் செயற்படுவதை எந்த மனித நேயம் கொண்ட நபராலும் ஏற்க முடியாது.

பெரும்பாலான வீடுகளை இழந்தவர்கள் ஒன்றும் அரச வீடுகளை கொண்டிருந்தது கிடையாது. அவர்கள் தமது சொந்த உழைப்பாலும் பலவருட சிக்கன சேமிப்பு வாழ்வாலும் கடனும் வட்டியும் கட்டிச் சொந்த வீடுகளில் வாழ்ந்தவர்கள். அவர்கள் மலையக மக்களைப் போன்ற லயன் வீடுகளில் வாழ்ந்து பழகியவர்கள் அல்ல. அத்தகைய வீடுகள் சுரண்டி வாழும் முதலாளிகளின் கருத்தில் மக்களின் வதிவிட வசதிகளாகப் பேசப்படலாமே தவிர கால் நடைத் தொழுவங்களாகவும் எவராலும் அங்கீகரிக்கப் படாதவை. இவற்றை எல்லாம் அரசின் முன்னாள் இந்நாள் தமிழ் அமைச்சர்களின் புரிதலுக்காகவும் மலையகத் தமிழ் மக்கள் எத்தகைய வாழ்விடங்களி;ல் அவதிப்படுகிற உண்மையை குறிப்பாக மலையகத்தைச் சேர்ந்த அமைச்சருக்கு சுட்டிக் காட்டவுமே இங்கு குறிப்பிடுகிறோம்.

இந்த 65.000 வீடுகளும் ஏற்கனவே புனையப் பட்ட பாகங்களை பொருத்தி உருவாக்கப் படுவவை. இவற்றின் சுவர்கள் கூரைகள் நிலங்கள் எல்லாம் செயற்கை இழைகளால் வடிவமைக்கப் படுவன. இவை குளிர் பிரதேசங்களில் மக்கள் வசிப்பதற்கு பயன்படலாமே அல்லாமல் எம்முடையன போன்ற வெப்ப வலைய பிரதேசங்களுக்கு ஏற்புடையன அல்ல. ஒரு காலத்தில் அமெரிக்க வடிவிலான அஸ்பெஸ்டாஸ் தகடுகளை கூரைகளாவும் உட்புற சீலிங்குகளாகவும் கொண்ட வீடுகளை பெரிதாகப் பாராட்டி மகிழந்த எமது மக்கள் அவை வெளிப்படுத்தும் அளவற்ற வெப்ப அலைகளால் அவதி உற்று அனுபவித்த பின்னர் அவற்றை அறவே அகற்றி பழைய மண் ஓட்டு வீடுகளையும் மரக் கூரைகளையும் திரும்ப ஏற்றுக் கொண்ட வீடுகள்தான் பெரும்பாலான போரினால் அழிவுற்ற வீடுகளாகும்.

எனவே இன்று அரசு வழங்க முன்வரும் செயற்கை இழை வீடுகள் உலோக வீடுகள் போன்று மனித வாழ்வுக்குச் சிறிதும் ஒவ்வாத கதிர் வெப்ப அலைகளையும் உடல் ஆரோக்கியச் சீர்கேடுகளையும் தரக் கூடியன. அப்படியான வீடுகளில் இன்றைய அமைச்சர் சுவாமிநாதனோ அவற்றைத் தமிழ் மக்கள் ஏற்க வேண்டும் எனக் கூறும் முன்னாள் அமைச்சர் டக்லஸ் தேவானந்தாவோ அரை மணி நேரத்தைக் கூடக் அனுபவித்துப் பார்க்க முற்பட மாட்டார்கள்.



இத்தகைய ஒட்டுப் பெட்டி வீடுகளை யாழ் வலி வடக்குப் பகுதி மற்றும் மன்னார் போன்ற வரட்சி மிக்க கொடிய வெப்ப பிரதேச மக்களுக்கு வழங்க இந்த நல்லாட்சி அரசு முற்படுகிறது.

இவை பற்றி வட மாகாண முதலமைச்சர் எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொழுது வட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மக்களைக் கலந்து ஆலோசிக்காமல் இத்தகைய வீடுகளை வழங்க அரசு முற்படுகிறது என்கிறார். உரும்பிராய் பகுதிகளில் 21 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப் பட்டுவரும் வீடுகள் மக்களுக்கு ஏற்புடையன அல்ல என்பதோடு எதற்காக தொலைக்காட்சி போன்ற வசதிகளுடன் இவை அமைக்கப்பட வேண்டும்? அதே தொகைப் பணத்தில் 3 வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாமே எனவும் பொருத்து வீடுகளில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் உதிரிப் பாகங்களை எங்கிருந்து எவரிடம் கேட்டுப் பெறுவது எனவும் கேட்டுள்ளார்.

அரசுக்கு 130,000,000,000 பணம் உடனடியாகக் கிடைக்கிறது என்பது நன்மை பயக்கும் என்பதால் ஏற்கிறோம். ஆனால் 15 வருடத்துக்குப் பிறகு இந்தப் பணம் திருப்பி வழங்க வேண்டும் இது அன்பளிப்பு அல்ல கடன். ஆகவே கடன் அடிப்படையில் வீடு நிர்மானிக்கும் பொழுது சூழலுக்கு ஏற்ற விதத்தில் நீண்ட காலம் வாழும் விதத்திலும் இருக்க வேண்டும் கூடுதலான மக்களுக்கு கையளிக்கும் விதத்திலும் அமைய வேண்டுமே தவிர சிங்கப்பூர் மாதிரி கட்ட வேண்டிய அவசியம் இல்லை எனவும் கூறுகிறார்.

இது விடயத்தில் திரு.சுமந்திரன் கூறும் கருத்துகளையும் வரவேற்கிறோம். வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிக வீடுகள் தேவைப்படும் நிலையில மீள் குடியேற்ற அமைச்சு அமைக்கும் வீடுகள் கால நிலை, வாழ்க்கை நிலைக்குப் பொருந்துமா எனப் பார்க்க வேண்டும். மேலும் வடக்கு கிழக்கில் வீட்டுத் திட்டத்தைச் சாட்டாகப் பயன்படுத்தி ஊழலிலும் ஒழுங்கீனமான செயலிலும் எவரையும் ஈடுபட அனுமதிக்க மாட்டோம் எனப் பேசி இருப்பது மனதுக்கு ஆறுதல் தருகிறது.

ஆனால் இந்த ஒட்டு இல்லது பொருத்து வீடுகள் என்ற திட்டமே மக்கள் விரோத முறைகேடுகளுடன் தொடர்பு பட்டதாக தெரிகிறது. முதலில் தொழில் வளம் இழந்து தவிக்கும் எம் மக்களை தொழில் கொடுக்கும் திட்டமாக இந்நிதி உதவியைப் பயன்படுத்த முடியும். இத்தனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட காலமாக நம்மக்கள் வெகு சிறப்பாகக் கட்டி வாழ்ந்த வீடுகள் அத்தனையும் உள்ளூர் மக்களால் கட்டப் பட்டவையே.

உறுதியும் அழகிய வடிவமைப்புடனும் அமைந்த வீடுகள எதனையும் வெளிநாட்டார் வந்து கட்டித் தரவில்லை. எனவே அனுபவமும் தொழில் நிபுணத்துவமும் எமக்குப் புதியவை அல்ல. 2 ம் உலகப் போரின் போது பிரித்தானிய படைகளின் கட்டிடத் தேவைகள் அனைத்தையும் சிறப்பாக செய்து கொடுத்தவர்கள் உள்ளூர் மக்களே. பலாலி ஆசிரியர் கலாசாலை காங்கேசன் வைத்திய சாலைக் கட்டிடறங்கள் இன்றும் பயன்பாட்டில் இருப்பதால் எமது தொழிலாளரின் திறமை கண்கூடாக வெளிப்படுகிறது.

இவற்றில் எதனையும் கவனத்தில் எடுக்காமல் முழப் பணத்தையும் ஒரு நம்பகமற்ற அந்நிய நிறுவனத்திடம் கொடுத்து விட்டு வெறும் சக்கையான சரக்கையும் அதற்கான கடனையும் வட்டியையும் மீளக் கொடுக்கும் சுமையை போரினால் பாதிபக்கப்பட்ட எம்மக்களின் மீதே சுமத்துவதை நாம் அனுமதிப்பதா?

இந்த வீடுகளின் ஒப்பந்தம் அஸார் மிட்டார் அல்லது ஐ.வி.ஆர.சி.எல் என்;ற இந்தி நிறுவனத்திடம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் கல்கத்தாவின் அண்மைக் காலத்து மேம்பாலம் இடிந்து விழுந்து 24 பேரின் மரணத்துக்கும் நுற்றுக் கணக்கான பொது மக்களுக்கு படு காயங்களையும் ஏற்படுத்திய பின்புலத்தைக் கொண்டுள்ளது. இந்த வீட்டுத் திட்டத்தின் மூலம் மிகப் பெரும் இலஞ்ச ஊழல் மோசடி இருக்கும் வாய்ப்பபே உள்ளது.

எனவே திரு சுமந்திரன் டக்லஸ் போன்றோர் இதில் உள்ளூர் அரசியல் மோதலில் ஈடுபடாமல் இதனை ஒரு பொது சேவையாகக் கருதி இந்த திட்டத்தின் முழு பலனையும் எமது மக்களே பெறும் வகையில் கட்டுமானத்தை மக்கள் சபைகள் சங்கங்களிடம் ஒப்படைத்து எம் மக்களின் தொழில் வளத்தைப் பெருக்கி வாழ வைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச்சலுகை!

**Hauptsitz:**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225

**Niederlassung:**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
or 0231 58 96 557
Fax: 0231 58 44 665

**Sri Lanka:**
No - 82,
New Chetty Street
Colombo 13
Tel.: 011 2 322 838

CENTURY
TRAVELS

# Sri Lanka direct Flight

**11.07 சென்று 15.08 திரும்புவது**

**18.07 சென்று 22.08 திரும்புவது**

**சிறப்பு பயணச்சலுகை 699€**

**699€**

GUARANTEED
BEST PRICE

**Ram Nishanthan**
Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal
0176 21 68 21 49






# CENTURY TRAVELS GmbH

Web: www.centurytravels.de

eMail: info@centurytravels.de


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல நாடுகளுக்குமான விமான பிரயாணச் சீட்டுகள், சுற்றுலா ஒழுங்குகளை மலிவாகவும் நேர்த்தியாகவும் செய்து கொள்ள

KTS

## KRISH TOURS & TRAVELS AG, ZURICH

சுவிஸ் தர நிர்ணய நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றது


REISEGARANTIE

SRV FSV
Schweizer Reise-Verband
Fédération Suisse du Voyage
Federazione Svizzera di Viaggi







- இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்கு விசேட விலையில் விமானப்பயணச்சீட்டுக்களையும் சுற்றுலா ஏற்பாடுகளையும் செய்து தருகிறோம்
- முன்னணி நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை பேணி நாளாந்த விலைச் சலுகைகளை பெற்று உங்கள் பயணத்தை உங்கள் விருப்பப்படியே அனைத்து வசதிகளுடனும் அமைத்து தருகிறோம்
- இலவச ஆலோசனை, தன்னிகரற்ற வாடிக்கயாளர் சேவை

**நம்பிக்கை | தரம் | மலிவு | சிறந்த மக்கள் சேவை**

KRISH TOURS & TRAVELS AG
Waisenhausstrasse 5 8001 Zürich

Phone: 044 808 98 00
Email : info@ktsswiss.ch

Monday - Friday: 09:00h - 19:00h
Saturday: 09:00h - 16:00h

**Call: 044 808 98 00 | www.ktsswiss.ch**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இங்கே உங்கள் நிறுவனத்தின் விளம்பரத்தை மிகக் குறைந்த விலையில் பதிவுசெய்யலாம்.**

தொர்புகளுக்கு: 0049 (0) 2381 95 66 09 - 0049 (0) 173 7539277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org